உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு-கோவை - 2010

# கலைஞர் படைப்புகள்

## நூலடைவு

UG 7204

பெ. கோவிந்தசாமி

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# கலைஞர் படைப்புகள்

நூலடைவு

முனைவர் பெ. கோவிந்தசாமி
விரிவுரையாளர்
நாடகத்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 010

ISBN: 978-81-7090-420-5

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண்.377

| | | |
|---|---|---|
| நூல் | : | கலைஞர் படைப்புகள் நூலடைவு |
| ஆசிரியர் | : | முனைவர் பெ. கோவிந்தசாமி |
| மொழி | | தமிழ் |
| பொருள் | | இலக்கியம்/படைப்பிலக்கியம் |
| பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2041, ஆனி<br>முதற்பதிப்பு - சூன் 2010 |
| பக்கம் | : | 172+24 |
| தாள் | : | 70 ஜிஎஸ்எம் மேப்லித்தோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| விலை | : | உரூ. 120/- |
| படிகள் | : | 1200 |
| ஒளியச்சு | : | கருணா பிரசாத் |
| அச்சு | : | ஜப்பானிக்கா பிரிண்டிங் மீடியா 17 (7) ஸ்ரீபுரம்,<br>இரண்டாவது தெரு, இராயப்பேட்டை<br>சென்னை 600 014. |

# பொருளடக்கம்


அணிந்துரை

முன்னுரை

பதிவுகளின் எண்ணிக்கையும்
படைப்புகளின் எண்ணிக்கையும்

அடைவு உருவாக்கப்பட்டிருக்கும்
முறைமை

சமூகப்புதினங்கள் 1-4

வரலாற்றுப்புதினங்கள் 4-5

சிறுகதைகள் 6-18

நாடகங்கள் 18-24

திரைப்படங்கள் 24-27

திரையிசைப் பாடல்கள் 27-28

கவிதைகள் 28-38

கவியரங்கக் கவிதைகள் 38-43

காவியம் 43-44

உரை 44

உரை விளக்கங்கள் 45-48

பொது 48-50

வரலாறு/நினைவுப் பதிவுகள் 50-53

தன் வரலாறு/வாழ்க்கை வரலாறு 53-54

கடிதங்கள் 54-72

கட்டுரைகள் 72-81

கலை-இலக்கியம்
பண்பாட்டுப் பொழிவுகள் 81-92

கருத்தரங்கம்/மாநாட்டுப் பொழிவுகள் 92-93

பட்டமளிப்பு விழாப் பொழிவுகள் 93-95

வானொலிப் பொழிவுகள் 95

தொலைக்காட்சிப் பொழிவு 96

சட்டமன்றப் பொழிவுகள் 96-113

அரசியல் பொழிவுகள் 113-125

பொது 125-130

நேர்காணல்/கேள்வி-பதில் 130-133

பயண இலக்கியம் 133

சிந்தனைத் துளிகள் 133-137

அகர வரிசையில்
கலைஞர் படைப்புகள் 139-162

ஆங்கில மொழிபெயர்ப்பில்
கலைஞர்படைப்புகள் 163-164

கலைஞர் படைப்புகளை
வெளியிட்டுள்ள வெளியீட்டகங்கள் 165-168

கலைஞர் படைப்புகள்
வெளியான சிறப்பு மலர்கள் 169-172

**முனைவர் ம. இராசேந்திரன்** **தமிழ்ப் பல்கலைக்கழகம்**
**துணைவேந்தர்** **தஞ்சாவூர்–613 010**

## அணிந்துரை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கும் மேலான வழிகாட்டுதலுக்குமிணங்க 2010 சூன் 23-27ஆம் நாட்களில் கோவையில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினைத் தமிழுலகம் மகிழ்ச்சியோடு வரவேற்றுப் போற்றுகிறது. உலகமெலாம் தமிழோசை பரவிடவும் தமிழர்தம் தொன்மையும் சிறப்பும் வெளிப்படவும் இம்மாநாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இம்மாநாட்டு ஆய்வரங்குகளில் உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு ஐம்பத்தைந்து வகைப்பாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவுள்ளனர்.

இம்மாபெரும் ஆய்வரங்க நிகழ்ச்சிகளை அமைத்து, ஒருங்கிணைத்து நடத்தும் பெரும் பொறுப்பினை **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளித்துள்ளார்கள். தமிழ்ப் பல்கலைக்கழகம் இப்பொறுப்பினை மனமுவந்து ஏற்று அல்லும் பகலும் அயராது பணியாற்றி வருகிறது. மாநாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஆய்வரங்கங்களின் பணிப் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த **மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாநாட்டினையொட்டித் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், வரலாறு, நாகரிகம், பண்பாடு, கலை, அறிவியல்,

மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு துறைகள் சார்ந்த நூல்களைச் சிறப்பு வெளியீடுகளாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகிறது. அவ்வகையில் இந்நூலும் ஒன்று. இதன் ஆக்கப்பணியில் முனைந்து பணியாற்றிய நூலாசிரியர் முனைவர் பெ. கோவிந்தசாமி, பதிவாளர் முனைவர் சா.பி. சரவணன், பதிப்புத்துறை இயக்குநர் திரு. வை.கண்ணபுரக்கண்ணன், அலுவலர்கள், பணியாளர்கள், கணினியச்சு செய்தளித்தோர், அட்டை வடிவாக்குநர், அச்சகத்தார் முதலிய அனைவருக்கும் என் வாழ்த்தும் நன்றியும் உரியதாகும்.

# முன்னுரை

விதைக்குள் விருட்சமிருப்பது அப்படியொன்றும் அதிசய மில்லை......... ஒற்றை விதைக்குள் ஓராயிரம் விருட்சங்கள் ஒளிந்திருப்பதுதான் அதிசயம்...அப்படிப்பட்ட பேரதிசயம் நம் கலைஞர்!

தமிழ் வாழ்வின் அத்தனைப் பரிமாணங்களையும் தம் படைப்புக்குள் கொண்டுவந்து கொட்டிவிடும் வித்தை கற்றவர் கலைஞர்.

உரைநடையில் எதை எழுதினாலும் அதைக் காப்பியமாக்கி விடும் கலை கலைஞருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறது...

மேடையில் எதை முழங்கினாலும் அதைக் கவிதையாய் கட்டமைக்கிற நுட்பம் கலைஞரது எழுதுகோலுக்கு மட்டுமே கைகூடியிருக்கிறது.

தமிழ்ச் சமூகத்தின் கரடுமுரடான பாதைகளையெல்லாம் கலைத்துப் போட்டுவிட்டு தன் ஆற்றல் வாய்ந்த எழுத்தாளுமை யால் கலைவண்ணம் மிக்க கலைகளைக் கலைஞரால் மட்டுமே சமைக்க முடிகிறது...

பழைய மரபுகளை அகழ்ந்தெடுத்து அவற்றை ஆராய்ந்தெ டுத்துப் புதிய உலகுக்கு ஏற்ற வகையில் அவற்றை வடிவமைத்துத் தரும் ஒப்பற்ற எழுத்துச்சிற்பி கலைஞர்...

புதினம், சிறுகதை, கவிதை, கடிதம், கட்டுரை என கலைஞரின் எல்லா எழுத்துக்களிலும் மனிதநேயமே நீக்கமற நிறைந்து நிற்கிறது...

கலைஞர் படைப்புகளில் வெளிப்பட்டு நிற்கும் கருத்துக்களும் அவர்தம் நெஞ்சார்ந்த விழைவுகளும் அவருடைய சமுதாய நோக்கிற்குச் சான்றாகத் திகழ்கின்றன.

சமுதாயக் கொடுமைகளை மிகச் சரியாகக் கண்டறிந்து அவற்றுக்கான மிகச் சரியான தீர்வுகளைக் கண்டடைவதில் கலைஞருடைய எழுத்துக்கள் முழுவெற்றியடைந்துள்ளன.

தேவையான இடங்களில் இயல்பான வேகம்; மிகத் தேவையான இடங்களில் எரிமலையாய்ப் பொங்கும் சீற்றம்: இவையிரண்டுமே கலைஞர் எழுத்துக்களில் ஆளுமை செய் கின்றன.

மனிதனின் அறிவு அழிப்பு நோய்களுக்கெல்லாம் கலைஞரின் எழுதுகோல் பகுத்தறிவு மருந்து தந்து குணப்படுத்தி விடுகிறது.

வறுமைக் கோட்டுக்குக் கீழே வௌவால்களாகத் தொங்கிக் கொண்டிருப்பவர்களை வானம்பாடிகளாய் சிறகடித்துப் பறக்கவிட வழிசொல்பவை கலைஞரின் சிந்தனைகள்!

சமூக நெருடல்களுக்கு மிகக்கூர்மையான உள்ளடக்கங் களால் உருவான படைப்புகள் தந்து தீர்வுகண்டவர் கலைஞர்.

காலத்தின் தேவைக்கேற்ற உயரிய கருத்தாக்கங்களை மக்களின் முன்வைத்து மகத்தான வெற்றிகண்டவர் கலைஞர்.

பல்வேறு அரசியல் களங்களில் கண்ட வெற்றியைப் போலவே பல்வேறு இலக்கியத் தளங்களிலும் கலைஞர் இணையில்லா வெற்றி கண்டுள்ளார்.

அழகுத் தமிழ்நடையில் அமைந்த கலைஞரின் ஆழ்ந்த சிந்தனைகள் தமிழரின் மேன்மைக்கு எந்நாளும் ஆர்ப்பரிக்கும் கடல் அலைகளாய் ஓயாமல் உதவிக்கு ஓடிவரும்...

தமிழர்களுக்காய் தோள்களில் சுமந்த சுமைகளையெல்லாம் தம் எழுத்துக்களில் இறக்கிவைத்து ஆறுதல் கண்டவர் கலைஞர்.

சாதியின் பெயராலும் சமயத்தின் பெயராலும் பிளவுபட்டு நின்ற மக்களிடம் நியாயத் தராசு மூலம் சீர்திருத்தச் சிந்தனைகளை

வழங்கி ஒன்றுபடுத்தியவர் கலைஞர்.

தமிழகம் மறுமலர்ச்சியடைய கலைஞரின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு போர் வீரனைப் போல வினைபுரிந்துள்ளன.

வாழும் காலத்தின் மாற்றங்களையும் ஏற்றங்களையும் மிக நுட்பமாக நுணுகிப்பார்த்து தம் படைப்புகளில் பதிவு செய்தவர் கலைஞர்.

தமிழ் நாட்டுணர்வையும் தமிழ் மொழியுணர்வையும் சிதையாமல் காக்க எழுந்தவையே கலைஞர் படைப்புகள்!

தாய்த்தமிழுக்கு இன்னல் நேருமெனில் கலைஞரின் எழுத்துக்கள் வேல்களாகவும் வாள்களாகவும் மாறிப் போரிடத் தொடங்கிவிடுகின்றன!

அரசியலில் வீழ்ச்சியும் பின்னடைவும் ஏற்பட்ட போதெல்லாம் தம் ஆற்றல் வாய்ந்த எழுத்தால் தொண்டர்களை எழுந்திடவும் செயல்படவும் தூண்டியவர் கலைஞர்.

அரசியல் மாற்றத்தை எழுத்தால் ஏற்படுத்த முடியும் என்பதற்கு வாழும் சான்றாக விளங்கிக் கொண்டிருக்கும் கலைஞரின் படைப்புகளைப் பொருண்மை அடிப்படையில்,

சமூகப்புதினங்கள்

வரலாற்றுப்புதினங்கள்

சிறுகதைகள்

நாடகங்கள்

திரைப்படங்கள்

திரையிசைப் பாடல்கள்

கவிதைகள்

கவியரங்கக் கவிதைகள்

காவியம்

உரை

உரை விளக்கங்கள்

பொது

வரலாறு/நினைவுப் பதிவுகள்

தன் வரலாறு/வாழ்க்கை வரலாறு

கடிதங்கள்

கட்டுரைகள்

கலை-இலக்கியம் பண்பாட்டுப் பொழிவுகள்

கருத்தரங்கம்/மாநாட்டுப் பொழிவுகள்

பட்டமளிப்பு விழாப் பொழிவுகள்

வானொலிப் பொழிவுகள்

தொலைக்காட்சிப் பொழிவு

சட்டமன்றப் பொழிவுகள்

அரசியல் பொழிவுகள்

பொது

நேர்காணல்/கேள்வி-பதில்

பயண இலக்கியம்

சிந்தனைத் துளிகள்

என்றவாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

**சமூகப் புதினங்கள்**

கலைஞரின் முதல் சமூகப் புதினம் எனும் பெருமைக்குரியது பெரிய இடத்துப் பெண் என்னும் குறும்புதினம் ஆகும். இக்குறும்புதினத்தை வேலூர் திராவிடன் பதிப்பகம் 1953-ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டுள்ளது. சமூகப் புதினம் என்ற நிலையில் கலைஞர் 10 புதினங்கள் எழுதியுள்ளார்.

### வரலாற்றுப் புதினங்கள்

கலைஞரின் முதல் வரலாற்றுப் புதினம் ரோமாபுரிப் பாண்டியன். இப்புதினத்தைத் தமிழ்க்கனி பதிப்பகம் 1974-ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டுள்ளது. கலைஞர் எழுதியுள்ள வரலாற்றுப் புதினங்களின் எண்ணிக்கை நான்கு.

### சிறுகதைகள்

கலைஞரின் முதல் சிறுகதை என்ற பெருமைக்குரியது கிழவன் கனவு. 1945-ஆம் ஆண்டு திருவாரூர் அஜீஸ் பதிப்பகம் இச்சிறுகதையை நூலாக வெளியிட்டுள்ளது. கலைஞரின் குட்டிக்கதைகள் 34, கலைஞர் சொன்ன கதைகள் 40 ஆகியனவற்றோடு சேர்த்து கலைஞர் எழுதியுள்ள சிறுகதைகளின் எண்ணிக்கை 160 ஆகும்.

### நாடகங்கள்

கலைஞர் எழுதி நடித்த முதல் நாடகம் நச்சுக்கோப்பை என்பதாகும். இந்நாடகம் சாந்தா அல்லது பழனியப்பன் என்ற பெயரிலும் நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்நாடகப் பிரதியை வேலூர் திராவிடன் பதிப்பகம் 1943இல் நூலாக வெளியிட்டுள்ளது. இந்நூல் ஏழு பதிப்பு கண்டுள்ளது. கலைஞர் எழுதியுள்ள நாடகங்களின் எண்ணிக்கை 20 ஆகும்.

### திரைப்படங்கள்

அண்மைக்காலம் வரையிலான கலைஞரின் திரைத்துறைப் பங்களிப்பென்பது அளப்பரியதாகும். தனது 87 வயதிலும் கலைத்துறைப் பயணத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கும் கலைஞரின் கதை வசனத்தில் அச்சு வடிவம் பெற்ற முதல் திரைப்படம் மருதநாட்டு இளவரசி. 1951இல் கோவில்பட்டி, பைந்தமிழ்ப் பாசறை இத்திரைப்படத்தின் கதை வசனத்தை நூலாக வெளியிட்டுள்ளது. கலைஞரின் மந்திரிகுமாரி மற்றும் பராசக்தி திரைப்பட வசனங்களை மூன்று பதிப்பகங்கள் வெளியிட்டுள்ளன. கலைஞரின் மனோகரா ஐந்து பதிப்புகள் வெளிவந்துள்ளது. கலையுலகச் சாதனையாளர் கலைஞரின் 10 திரைப்படங்கள் மட்டுமே அச்சு வடிவம் பெற்றுள்ளன.

**கலைஞரின் திரையிசைப்பாடல்கள்**

1950 தொடங்கி 1988 வரையிலான காலகட்டத்தில் திரைப்படங்களுக்குக் கலைஞர் எழுதிய 40 திரையிசைப் பாடல்களின் தொகுப்பினை சென்னை காந்தளகம் 1989இல் நூலாக வெளியிட்டுள்ளது. இந்நூல் தவிர கலைஞரின் திரையிசைப் பாடல்கள் என்பதாக வேறு நூல் எதுவும் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

**கவிதைகள்**

கலைஞரின் முதல் கவிதைத் தொகுப்பு கவிதையல்ல என்பதாகும். கையடக்கத் திருக்குறள் பதிப்பு என்பதுபோல் கையடக்கப் பதிப்பாக, கலைஞரின் தொடக்ககால 15 கவிதைகளின் தொகுப்பு நூலாக அமைந்த இந்நூலினை திருவாரூர் அஜீஸ் பதிப்பகம் 1945இல் வெளியிட்டுள்ளது. தொடர்ந்து கலைஞர் இதுநாள் வரையில் எழுதியுள்ள கவிதைகளின் எண்ணிக்கை 390 ஆகும்.

**கவியரங்கக் கவிதைகள்**

அச்சில் வெளிவந்த கலைஞரின் முதல் கவியரங்கக் கவிதை விடுதலை வீரர்கள் என்பதாகும். இக்கவியரங்கக் கவிதை 1967ஆம் ஆண்டு முரசொலி அண்ணா மலரில் வெளியிடப்பட்டுள்ளது. அச்சில் வெளிவந்துள்ள கலைஞரின் மொத்தக் கவியரங்கக் கவிதைகளின் எண்ணிக்கை 36 ஆகும்.

**காவியம்**

மனிதநேய மாண்பு கொண்ட மக்சிம் கார்க்கியின் தாய் புதினத்திற்குக் கலைஞர் கொடுத்துள்ள புது வடிவமே தாய் காவியமாகும். கவிதை நடையில் எழுதப்பட்டுள்ள தாய் காவியமே கலைஞர் எழுதியுள்ள ஒரே காவிய நூலாகும். இக்காவியத்தைத் தமிழ்க்கனி பதிப்பகம் 2004-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

**உரை**

பல்வேறு உரைகளுக்கு உரை விளக்கங்கள் கண்ட கலைஞர் எழுதியுள்ள ஒரே உரை நூல் திருக்குறள்-கலைஞர் உரை என்னும் நூலாகும். திருமகள் நிலையம் வெளியிட்டுள்ள இந்நூல் 10 பதிப்புகளைக் கண்டுள்ளது.

### உரை விளக்கங்கள்

வள்ளுவரின் வாய்மையாம் திருக்குறள், தமிழ் மக்களின் பண்பாட்டு வாழ்வியலைக் காட்டும் சங்க இலக்கியங்கள், தமிழின் இலக்கண நுண்ணறிவு வெளிப்பாடாய் அமையும் தொல்காப்பியம் ஆகியனவற்றிற்குப் பல்வேறு உரைகள் எழுதப்பட்டுள்ளன எனினும் அவற்றிற்கு உரைவிளக்கம் தந்த பெருமை கலைஞரையே சாரும். 06.08.1954 முரசொலி நாளிதழில் எழுதிய குறளோவியமே கலைஞர் எழுதிய முதல் குறளோவியமாகும். தலையாலங் கானத்தான் என்னும் தலைப்பில் புறநானூறு 72-ஆம் பாடலுக்கு கலைஞர் தீட்டிக் காட்டியதே கலைஞரின் முதல் சங்கத் தமிழ் ஓவியமாகும். இவ்வோவியம் 1958-ஆம் ஆண்டு முரசொலி பொங்கல் மலரில் வெளிவந்துள்ளது. தொல்காப்பியத்தின் 144 நூற்பாக்களுக்குக் கலைஞர் எழுதியுள்ள உரைவிளக்கம் தொல்காப்பியப் பூங்காவாக மலர்ந்துள்ளது. இதனைத் தமிழ்க்கனி பதிப்பகம் சனவரி 2003-இல் நூலாக வெளியிட்டுள்ளது. இதுவரை கலைஞர் எழுதியுள்ள மொத்த உரைவிளக்கங்களின் எண்ணிக்கை 714 ஆகும்.

### பொது

பொது என்னும் பொருண்மைப் பகுப்பில் 2 பதிவுகள் இடம்பெற்றுள்ளன. ஒன்று கலைஞரின் இளமைக் காலத்து 26 படைப்புகளின் தொகுப்பாக அமையும் மீசை முளைத்த வயதில் மற்றொன்று கலிபோர்னியா பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட்டின் தமிழ் இலக்கியத்தில் கலைஞரின் தொண்டு என்னும் முன்னுரையுடன் வெளிவந்துள்ள கலைஞர் களஞ்சியம் என்னும் தொகுப்பு நூலாகும்.

### வரலாறு/நினைவுப் பதிவுகள்

கலைஞரின் வரலாற்று நினைவுகளின் பதிவுகளாக 107 பதிவுகள் இப்பொருண்மையில் தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைக்கப் பட்டிருந்த 6 மாதகால சிறை அனுபவங்களின் தொகுப்பாக அமையும் ஆறு மாதக் கடுங்காவல் என்னும் நூல் கலைஞரின் நினைவுப் பதிவுகளில் முதல் பதிவாக அமைகிறது. இதனை

திருச்சிராப்பள்ளி திராவிடப் பண்ணை 1953-இல் நூலாக வெளியிட்டுள்ளது.

**தன்வரலாறு/வாழ்க்கை வரலாறு**

சமுதாயத்தின் சமகால வரலாறாக அமையும் கலைஞரின் வாழ்க்கை வரலாறு குறித்த 5 பதிவுகள் இப்பொருண்மையில் இடம்பெற்றுள்ளன. முதல் பதிவாக அமையும் நெஞ்சுக்கு நீதியின் முதல் பாகத்தை தினமணி கதிர் 1975-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளது.

**கடிதங்கள்**

கடிதங்கள் வழி கழகம் வளர்த்த கலைஞர் எழுதிய 670 கடிதங்கள் குறித்த விவரங்கள் இப்பொருண்மைப் பகுப்பில் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. புகுமுன் என்பது கலைஞர் எழுதிய முதல் கடிதமாகும். இக்கடிதம் 1962-ஆம் ஆண்டு முரசொலி அண்ணா 54-ஆவது பிறந்தநாள் சிறப்பிதழில் வெளிவந்துள்ளது.

**கட்டுரைகள்**

கலைஞரின் எழுத்தில் வெளியான முதல் கட்டுரைத் தொகுப்பு உணர்ச்சி மாலை என்பதாகும். சென்னை, கருணாநிதி பதிப்பகம் 1951-இல் இந்நூல் தொகுப்பை வெளியிட்டுள்ளது. 41 பதிவுகளில் கலைஞர் எழுதியுள்ள 144 கட்டுரைகள் குறித்த தகவல்கள் இப்பகுதியில் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பதிப்பியல் வரலாற்றில் 1981-இல் முதற்பதிப்பு கண்ட பேசும் கலை வளர்ப்போம் என்னும் கலைஞரின் கட்டுரை நூல் 2008 மார்ச் வரை 13 பதிப்புகள் கண்டுள்ளது பதிப்பியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும்.

**கலை இலக்கியம் பண்பாட்டுப் பொழிவுகள்**

57 பதிவுகளில் கலைஞரின் 241 பொழிவுகள் குறித்த தகவல்கள் இப்பகுதியில் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சென்னை பொறியியல் கல்லூரியில் பூந்தோட்டம் என்ற தலைப்பில் கலைஞர் ஆற்றிய சொற்பொழிவு, சென்னை திராவிடப் பண்ணை வெளியீடாக 1951-ஆம் ஆண்டு பூந்தோட்டம் எனும்

தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. இந்நூலே கலைஞரின் பொழிவுகள் குறித்த முதல் நூலாக அமைகிறது.

### கருத்தரங்கம்/மாநாட்டுப் பொழிவுகள்

1996-1997 காலத்தில் கலைஞர் அவர்கள் கருத்தரங்கு மற்றும் மாநாடுகளில் கலந்துகொண்டு ஆற்றிய பொழிவுகளில் 5 பொழிவுகள் மட்டுமே அச்சு வடிவம் பெற்றுள்ளன.

### பட்டமளிப்பு விழாப் பொழிவுகள்

பல்கலைக்கழக நிலையில் தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாக்களில் கலந்துகொண்டு கலைஞர் ஆற்றிய பட்டமளிப்பு விழா பொழிவுகளில் 8 பொழிவுகள் மட்டுமே அச்சு வடிவம் பெற்றுள்ளன. அவற்றுள் 1975-ஆம் ஆண்டில் நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்தின் 118-ஆவது பட்டமளிப்பு விழா பொழிவு அச்சில் வெளிவந்துள்ள முதல் பொழிவாக அமைந்துள்ளது.

### வானொலிப் பொழிவுகள்

கலைஞரின் வானொலிப் பொழிவுகள் என்பதாக 4 பொழிவுகள் மட்டுமே அச்சு வடிவம் பெற்றுள்ளன. 1971 பொதுத் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து 16.03.71 அன்று கலைஞர் சென்னை வானொலியில் ஆற்றிய உரை தென்றல் வீசட்டும் என்னும் தலைப்பில் 1971 முரசொலி அண்ணா நினைவு மலர்-தி.மு.க. வெற்றி மலரில் வெளியிடப்பட்டுள்ளது. இதுவே கலைஞரின் அச்சு வடிவம் பெற்ற முதல் வானொலிப் பொழிவாக அமைந்துள்ளது.

### தொலைக்காட்சிப் பொழிவு

சென்னைத் தொலைக்காட்சி முதல் அலைவரிசையில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளையொட்டி 15.09.95 அன்று கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை தமிழன் தமிழன் ஆனான் என்னும் தலைப்பில் 1995 முரசொலி முப்பெரும் விழா மலரில் வெளியிடப்பட்டுள்ளது. இது ஒன்றே கலைஞரின் தொலைக் காட்சிப் பொழிவு என்பதாகக் காணக் கிடைக்கிறது.

### சட்டமன்றப் பொழிவுகள்

தமிழ் ஆங்கிலம் என 77 பதிவுகள், 622 பொழிவுகள் எனக் கலைஞரின் சட்டமன்றப் பொழிவுகள் இப்பகுதியில் தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன. தமிழகச் சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்து 28.01.70 அன்று ஆற்றிய உரை உதயஒளி என்னும் தலைப்பில் சென்னை, புகழ் பதிப்பக வெளியீடாக 1970-ஆம் ஆண்டு நூலாக வெளிவந்துள்ளது. இதுவே கலைஞரின் சட்டமன்றப் பொழிவுகளில் அச்சுவடிவம் பெற்ற முதல் நூலாகும்.

### அரசியல் பொழிவுகள்

56 பதிவுகள், 77 பொழிவுகள் என அமையும் கலைஞரின் அரசியல் பொழிவுகளில் அச்சு வடிவம் பெற்ற முதல் பொழிவு சென்னை அறிவுப்பண்ணை 1949-இல் வெளியிட்ட அறப்போர் என்னும் நூலாகும்.

### பொது

மேற்கண்ட பொழிவுகளின் வகைப்பாட்டில் வராத மற்ற பதிவுகள் பொது என்னும் வகைப்பாட்டினுள் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 20 பதிவுகள், 28 பொழிவுகள் என இவ்வகைப்பாடு அமைந்துள்ளதைக் காணலாம்.

### நேர்காணல்/கேள்வி-பதில்

பல்வேறு இதழ்களுக்கும் பத்திரிக்கையாளர்களுக்கும் கலைஞர் அளித்த நேர்காணல்கள், கேள்வி-பதில்கள் அவர் எழுதிய கரிகாலன் பதில்கள், வினா-விடை குறித்த செய்திகள் இப்பகுதியில் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 20 பதிவுகள், 26 நேர்காணல்/கேள்வி-பதில்கள் என இப்பகுதி அமைந்துள்ளது.

### பயண இலக்கியம்

பயண இலக்கியம் என்ற நிலையில் கலைஞர் எழுதியுள்ள பயண அனுபவப் பதிவு என்பது 1973-இல் பாரதி நிலையம் வெளியிட்டுள்ள இனியவை இருபது மட்டுமே. இந்நூல் 2006 வரை ஆறு பதிப்பு கண்டுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

**சிந்தனைத் துளிகள்**

கலைஞரின் எழுத்துக்கள் மற்றும் பொழிவுகளிலிருந்து தொகுக்கப்பட்ட அவரின் சிந்தனைகள் பலரால் தொகுத்து நூலாக வெளியிடப்பட்டுள்ளன. 1953-இல் மாயூரம் இளங்கோ பதிப்பகம் வெளியிட்டுள்ள சிந்தனை ஆழி கலைஞரின் முதல் சிந்தனை வெளிப்பாட்டு நூலாக அறியப்படுகிறது. இதுபோன்று 22 நூல்கள் தொகுக்கப் பட்டுள்ளன.

கலைஞர் படைப்புகளை 92 வெளியீட்டகங்கள் வெளியிட் டுள்ளன. இதில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக்கழகம் 92 படைப்புகளை வெளியிட்டுள்ளது. இதற்கு அடுத்த நிலையில் தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறை 45 படைப்புகளையும் தமிழ்க்கனி பதிப்பகம் 30 படைப்புகளையும் வெளியிட்டுள்ளன. முரசொலி, திராவிடன், காஞ்சி, தென்னகம், திருவிளக்கு, கழகக் குரல், நம்நாடு, எண்ணம் என்பன போன்ற இதழ்கள் வெளியிட்டுள்ள 77 சிறப்பு மலர்களில் கலைஞர் படைப்புகள் வெளிவந்துள்ளன.

அகர வரிசையில் கலைஞர் படைப்புகள், ஆங்கில மொழிபெயர்ப்பில் கலைஞர்படைப்புகள், கலைஞர் படைப்புகளை வெளியிட்டுள்ள வெளியீட்டகங்கள், கலைஞர் படைப்புகள் வெளியான சிறப்பு மலர்கள் ஆகியன இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

கலைஞர் படைப்புகளைத் தொகுத்து நோக்கின் இந்நூலின் வழி 584 பதிவுகள், 3373 படைப்புகள் குறித்து அறியலாம். தமிழிலக்கிய வரலாற்றில் இது ஒரு சாதனை. படைப்புலக அதிசயமாம் கலைஞர் ஒருவருக்கு மட்டுமே இது சாத்தியம்.

அரிதின் முயன்று கலைஞர் படைப்புகள் தொகுக்கப் பட்டுள்ளது. இத்தொகுப்பில் இடம் பெறாத படைப்புகள் குறித்துத் தெரியவரின் தகவல் தெரிவித்தால் அடுத்த பதிப்பில் இணைத்துக் கொள்ள வாய்ப்பாக அமையும். தகவல் தெரிவித்து உதவிட கேட்டுக் கொள்கிறேன்.

❑

என் உழைப்பின் மீதும் என் ஆய்வு நேர்மையின் மீதும் நம்பிக்கைவைத்து, அறிவுலக அதிசயம் கலைஞர் அவர்களின் படைப்புகளை நூலடைவாக்கும் மிகப்பெரிய பேற்றினை எனக்கு வழங்கிய என்மீது அன்புகாட்டி அரவணைக்கும் என் எண்ணமெல்லாம் நிறைந்திருக்கிற இனிய துணைவேந்தர் முனைவர் ம. இராஜேந்திரன்...

பணி தொடங்கிய காலத்தில் துணை நின்ற அன்பான சகோதரர் முனைவர் பெ. இராமலிங்கம்...

இன்முகத்தோடு கலைஞர் படைப்புகளை எடுத்தும், தேடியும் கொடுத்து உதவிய அண்ணா அறிவாலய-பேராசிரியர் ஆய்வக நூலகத்தின் நூலகர் திரு. சுந்தர்ராஜன்...

துணை நூலகர் திரு. செந்தில்...

கன்னிமாரா பொது நூலகத்தின் திரு. மீனாட்சிசுந்தரம்...

தமிழ்ப் பல்கலைக்கழக வ.அய். சுப்ரமணியம் நூலகத்தின் இயக்குநர் (பொ.) முனைவர் பா. சுந்தரேசன்...

கணிப்பொறி இயக்குநர் சகோதரர் தி. சிவகுமார்...

ரோஜா முத்தையா ஆய்வக நூலகம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம்

தலைமைச் செயலக நூலகம்

ஆகியனவற்றின் நூலகர்கள் மற்றும் பணியாளர்கள்...

தட்டச்சு செய்வதில் துணை நின்ற நண்பர்கள் என். நடராஜன், கே.ஏ. செல்வராஜ்...

அன்புத் தம்பி பன்னிருகை வடிவேலன்...

சகோதரி செல்வி கீதா மற்றும் டில்லிபாபு. கணேசன்...

மெய்ப்புத் திருத்தம் செய்து உதவிய தமிழக அரசின் முன்னைத் தமிழ்வளர்ச்சி இயக்குநர் இன்னாள் தமிழ்ப்

பல்கலைக்கழகப் பதிப்புத் துறை இயக்குநர் திரு. வை. கண்ணபுரக் கண்ணன்...

அன்பிற்கினிய நண்பர் முனைவர் சா. உதயசூரியன்...

உழைப்பைப் பகிர்ந்துகொள்ளும் உன்னதமறிந்த சகோதரர் நா. இராமகிருஷ்ணன்...

பல்வேறு சிக்கல்களுக்கிடையிலும் மனமகிழ்ச்சியோடு நூலை வடிவமைத்துத் தந்திருக்கிற அன்புத் தம்பி கே.எஸ். கருணா பிரசாத்...

என் எல்லா முயற்சிகளுக்கும் உந்துசக்தியாக இயங்கிக் கொண்டிருக்கும் என் இனிய துணைவியார்

பேரா. முனைவர் வே. வினோபா...

எனக்கு எல்லாமுமாக இருக்கிற என் அன்பு மகள்கள் கோவி சிந்து பைரவி, கோவி நீலாம்பரி...

என்னை என்றும் நேசிக்கின்ற அன்பான சகோதரன் சா. தேவேந்திரன்...

இவர்களுடன்

இந்த நூலாக்க முயற்சியில் உதவிய அனைவருக்கும் நன்றி.

அன்புடன்

**பெ. கோவிந்தசாமி**

## பதிவுகளின் எண்ணிக்கையும்
## படைப்புகளின் எண்ணிக்கையும்

| | பதிவுகள் | படைப்புகள் |
|---|---|---|
| சமூகப்புதினங்கள் | 10 | 10 |
| வரலாற்றுப்புதினங்கள் | 7 | 4 |
| சிறுகதைகள் | 39 | 162 |
| நாடகங்கள் | 22 | 20 |
| திரைப்படங்கள் | 12 | 10 |
| திரையிசைப் பாடல்கள் | 1 | 40 |
| கவிதைகள் | 39 | 390 |
| கவியரங்கக் கவிதைகள் | 25 | 36 |
| காவியம் | 1 | 1 |
| உரை | 1 | 1 |
| உரை விளக்கங்கள் | 16 | 714 |
| பொது | 2 | 26 |
| வரலாறு/நினைவுப் பதிவுகள் | 10 | 107 |
| தன் வரலாறு/வாழ்க்கை வரலாறு | 5 | 5 |
| கடிதங்கள் | 88 | 669 |
| கட்டுரைகள் | 42 | 144 |
| கலை-இலக்கியம் பண்பாட்டுப் பொழிவுகள் | 54 | 241 |

| | | |
|---|---|---|
| கருத்தரங்கம்/மாநாட்டுப் பொழிவுகள் | 5 | 4 |
| பட்டமளிப்பு விழாப் பொழிவுகள் | 8 | 8 |
| வானொலிப் பொழிவுகள் | 4 | 4 |
| தொலைக்காட்சிப் பொழிவு | 1 | 1 |
| சட்டமன்றப் பொழிவுகள் | 78 | 622 |
| அரசியல் பொழிவுகள் | 56 | 77 |
| பொது | 21 | 28 |
| நேர்காணல்/கேள்வி-பதில் | 14 | 26 |
| பயண இலக்கியம் | 1 | 1 |
| சிந்தனைத் துளிகள் | 22 | 22 |

## அடைவு உருவாக்கப் பட்டிருக்கும் முறைமை

கலைஞர் படைப்புகள் குறித்த இந்நூலடைவில் கலைஞர் படைப்புகள் பற்றிய விவரங்கள் கீழ்வரும் முறைமையில் கொடுக்கப்பட்டுள்ளன.

நூலின் பெயர்/படைப்பின் தலைப்பு

சிறப்பு மலர்களிலிருந்து எடுக்கப்பட்டிருப்பின் மலரின் பெயர்

வெளியீட்டகத்தின்/வெளியீட்டாளரின் பெயர்

வெளியிடப்பட்ட இடம்

பதிப்பு

ஆண்டு

பக்கங்கள்

நூற் சுருக்கம்

மேற்குறித்த தகவல்கள் கிடைக்காத நிலையைக் குறிக்க

....................

என்னும் குறியீட்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

## சமூகப் புதினங்கள்




**பெரிய இடத்துப் பெண்,** திராவிடன் பதிப்பகம், வேலூர், முதற்பதிப்பு, 1953, பக்.48.

சீமான் வீட்டுச் செல்வி சின்னபுத்திக் காரியாக இருந்து தன் உடல் சுகத்திற்காக அபலைப் பெண் குமுதாவின் வாழ்க்கையைக் கெடுத்த கொடுமையைச் சொல்லும் இக்குறும் புதினம் இழிந்த சமூகத்தின் கிழிந்த திரையை விலக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது. இதில் பொருந்தா மணத்தால் விளையும் சீர்கேடுகளும், அழகு சிந்தும் இளம் வனிதையர்களின் எழில் நிறைந்த வாழ்க்கையை நரைத்துப்போன வாலிபக் கிழங்களோடு பிணைக்க முயற்சிப் பதும் அதனால் வரும் விபரீதங்களும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

**அரும்பு,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1956, பக்.188-192.

கருணா என்ற பெயரில் கலைஞர் எழுதிய குறும்புதினம். சுயமரியாதைத் திருமணத்தின் சிறப்பைச் சொல்லும் இக்குறும்புதினம் கலைஞரின் வார்த்தைகளில் சொல்வதானால், `அரும்பைப் பாதுகாக்கும் இரு இலைகளும் உதிர்ந்துவிடுமோ என்ற நிலை இருந்தது - இப்போது மீண்டும் இரு இலை ஒரு மொட்டு ஆகிவிட்டது: இந்தப் புதிய ஆரம்பம் இனி... இரு இலை இரு மொட்டு என்று ஆவதற்கான இன்ப ஆரம்பமாகவும் இருந்தது' எனலாம்.

**சாரப்பள்ளம் சாமுண்டி,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை,1963, பக்.8.

இராசராசன் இறைவனின் 108 தாண்டவ நிலைகளைப் பெரியகோவில் மேல்தளத்தில் உட்பாகத்து அடிவரிசை யில் சிற்பங்களாகச் செதுக்க ஏற்பாடு செய்தான். வேலையும் நடந்தது. 81 சிற்பங்களைச் செய்து முடித்து 82-ஆவது ஆரம்பித்து முடிக்காமல் எக்காரணம் பற்றியோ விடப்பட்டிருக்கிறது.' என்னும் வரலாற்றுப் பதிவை

அடிப்படையாகக் கொண்டு கலைஞர் எழுதிய குறும்புதினம்.

**வெள்ளிக்கிழமை,** திராவிடப்பண்ணை, திருச்சி ராப்பள்ளி இரண்டாம் பதிப்பு, 1968, பக்.178; பாரதி பதிப்பகம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, மார்ச்சு, 1987, பக்.176.

வெள்ளிக்கிழமை என்பது வாரத்தின் எல்லா நாட்களையும் போன்று ஒரு நாள் தான். வெள்ளிக்கிழமைக்கென்று தனிச்சிறப்பு ஏதும் கிடையாது என்பதை விளக்குவதுடன், சமூகத்தின் அபாயகரமான ஒரு சூழலில் சிக்கித் தவித்த ஒரு குடும்பத்தின் கதையைச் சொல்லும் இப்புதினம், வெள்ளிக்கிழமை அன்று ஓர் அபலைப் பெண்ணின் வாழ்வு எவ்வாறு பாழ்ப்படுத்தப் படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**புதையல்,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1975, பக்.380.

புதைந்து கிடக்கும் பொற்குவியலைத் தேடி அலையும் சுயநலவாதிகள் அதற்காகப் பின்பற்றும் மூடநம்பிக்கைகளையும்; செய்யும் கொலைகளையும்; இவர்களுக் கிடையில் அகப்பட்டு அல்லலுறும் இளங்காதலர்களான துரையும் பரிமளாவும் படும்பாட்டையும் எடுத்து விளக்கி, மூடநம்பிக்கைக்கு எதிராக முரசுகொட்டும் வகையில் எழுதப்பட்ட புதினம்.

**வான்கோழி,** மேகலா மாத இதழ், சென்னை, ஜூன் 1978, பக்.94.

மயில் போல் நடித்து ஊரை ஏமாற்ற நினைப்போரின் முடிவு அவலத்திலேயே முடியும் என்பதை எடுத்துச் சொல்வதாக இப்புதினம் எழுதப்பட்டுள்ளது.

**ஒரு மரம் பூத்தது,** மேகலா மாத இதழ், சென்னை, ஜூன் 1978, பக். ......; தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, ஜூன் 1979; இரண்டாம் பதிப்பு,1985, பக்.80.

சிறுகதை உலகில் புரட்சி ஏற்படுத்திய ஓ.ஹென்றி எழுதிய `கடைசி இலை' என்னும் சிறுகதையை மையமாகக் கொண்டு

எழுதப்பட்ட இப்புதினம், தேவகி என்ற வேர்ப்பலா விதவையைப் பன்னீர்ப்பூக்கள் பயமுறுத்தும் நிகழ்வுகளையும், பாபு, இராதா, மாணிக்கம், டாக்டர் போன்ற படைப்புருவகங்கள், எச்சரிக்கையுடன் பழக வேண்டிய சமுதாயப் பண்புருவங்களாகப் பளிச்சிடுவதையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

**அரும்பு,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1978, பக்.84; பாரதி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1983; நான்காம் பதிப்பு, சனவரி 2000, பக்.120.

கலைஞரால் படைக்கப்பட்ட

அரும்பு
சாரப்பள்ளம் சாமுண்டி
பெரிய இடத்துப் பெண்
நடுத்தெரு நாராயணி

எனும் நான்கு குறும்புதினங்களின் தொகுப்பு நூல். பொது நிலையில் இக்குறும்புதினங்கள் சமூகத்தின் இழிநிலையைப் படம் பிடித்துக் காட்டி, சமூக இயங்கு தளத்தைச் செப்பனிட முயற்சிக்கின்றன. இதில் உள்ள நடுத்தெரு நாராயணி என்னும் குறும்புதினம் புராணக் குப்பைகள் சமுதாயத்தில் ஒழுக்கக் கேட்டையும் கயமைத் தனத்தையும் நியாயப்படுத்துவதைச் சுட்டிக்காட்டுகிறது.

**ஒரே இரத்தம்,** பாரதி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, மே 1989, பக்.202.

புரையோடிக் கிடக்கும் சாதியப் பூசல்களுக்கும், சாதியக் கலவரங்களுக்கும் முடிவு கட்டி, சமத்துவ சமுதாயம் மலர வேண்டும் என்னும் கலைஞரின் புரட்சிகர எண்ணத்தின் வெளிப்பாடாக அமையும் இப்புதினம் எல்லோருடைய உடலிலும் ஓடுவது ஒரே இரத்தம்தான் என்னும் உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

**சுருளிமலை,** பாரதி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, சனவரி 1999, பக்.192.

கிராமியக் கலைகளாம் கரகாட்டம், தீச்சட்டி எடுத்தல், மயிலாட்டம் இவற்றின் மூலம் மக்களின் கலை உணர்வை மூட நம்பிக்கைக்குப் பயன்படுத்தும் எத்தர்களின் சுயநலத்தைத் தோலுரித்துக் காட்டுவதாக அமையும் இப்புதினத்தில், எப்படி வாழ வேண்டும் என்பதற்கு அறியாமை, மூட நம்பிக்கை நீங்கிய பூஞ்சோலை, பொன்மணியையும்; எப்படி வாழக்கூடாது என்பதற்குக் கற்பூரம், மைனா ஆகியோரையும் படைத்துக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வரலாற்றுப் புதினங்கள்




**ரோமாபுரிப்பாண்டியன்,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1974, பக்.706.

பாண்டியனுடன் பூம்புகார் வந்த செழியன், சோழநாட்டில் நிலவிவந்த அரசியல் புயலிலிருந்து பாண்டியனையும் சோழனையும் காப்பாற்றி, பாண்டியனின் தூதுவனாக ரோமாபுரி சென்று, அங்கு அகஸ்டஸ்சீசரைக் காப்பாற்றி, ரோமாபுரிப் பாண்டியனாகத் திரும்பியதைச் சொல்லும் வரலாற்றுப் புதினம். அத்துடன் கடந்த கால வரலாற்றுச் செய்திகளுக்கு இரத்தமும் சதையும் கொடுத்து வாழ்கால அரசியல் பிரச்சினைகள் மற்றும் வாழ்க்கை முறைகளோடு கடந்தகாலத்தையும் வரும் காலத்தையும் இணைக்கும் இணைப்பாக வாழ்காலத்தை அமைத்துப் படைக்கப்பட்ட வரலாற்றுப் புதினம் எனவும் குறிப்பிடலாம்.

**பொன்னர்-சங்கர்-அண்ணன்மார் வரலாறு,** கலைக்கனிப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1986, பக்.543.

இன்றைய உண்மையான சமத்துவ புரங்களின் அன்றைய நிழலாக அமையும் இப்புதினம் பொன்னர்-சங்கர் என்னும் அண்ணன்மார் வரலாறு கூறுவது எனினும் இனிய உணர்வுகளின்

சித்திரிப்பாகவும் உலகப் பொதுமைஉணர்வின் விளைச்ச லாகவும் அமைந்துள்ளது.

**பாயும்புலி பண்டாரக வன்னியன்,** ராக்போர்ட் பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, மே 1991, பக்.468.

இலங்கை வன்னி மண்ணில், மண்ணின் உரிமை காத்திடும் உறுதிபூண்டு, `உண்டேல் சுதந்திரம் இன்றேல் இல்லை வாழ்வு' என்ற முழக்கத்தை முன்வைத்து இறுதிவரை வீரங் காட்டிப் போராடிய பண்டாரக வன்னியனின் விடுதலை வேட்கையை வெளிப்படுத்தும் வகையில் படைக்கப்பட்டுள்ள இவ்வரலாற்றுப் புதினம்- வீரம், விவேகம் தியாகம் இவை எந்தத் திசையிலிருந்து ஒளி உமிழ்ந்தாலும் அதனைப் போற்றிப் புகழ்க்காவியம் படைக்க வேண்டும் என்னும் கலைஞரின் விருப்பத்தின் வெளிப்பாடு.

**தென்பாண்டிச் சிங்கம்,** திருமகள் நிலையம், சென்னை, எட்டாம் பதிப்பு, ஏப்ரல் 2007; ஒன்பதாம் பதிப்பு, பிப்ரவரி 2009; பத்தாம் பதிப்பு, சனவரி 2010. பக்.453.

இராமநாதபுரம் பகுதியில் சிவகங்கை, திருப்பத்தூர் வட்டாரத்தில் பாகனேரி நாடும் - பட்டமங்கலம் நாடும் எப்படி மோதிக்கொண்டு, பகைபாராட்டி இரத்தம் சிந்தின என்பதைத் தமிழக விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாற்றுப் பின்னணியோடு வீரமும் காதலும் பாசமும் பெருக்கெடுக்கும் வகையில் கற்பனைப் பெட்டகமாக உருவாக்கப்பட்டுள்ள வரலாற்றுப் புதினம்.

**Tenpantic cinkam,** Maruthanayagam .P and V. Murugan (Editors), Macmillan, Coimbatore, First Published 2009. PP. 222.




சுஜாதா விஜயராகவன் மொழிபெயர்ப்பில் கலைஞரின் தென்பாண்டிச் சிங்கம் வரலாற்றுப் புதினத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு.




**Ponnar Sankar,** Maruthanayagam .P and V. Murugan (Editors), Macmillan, Coimbatore, First Published 2009. PP. 338.

தில்லைநாயகம் மொழிபெயர்ப்பில் கோவை பாரதியார் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள கலைஞரின் பொன்னர் சங்கர் வரலாற்றுப் புதினத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு.




**Pantaraka Vanniyan -The Leaping Tiger,** Maruthanayagam .P and V. Murugan (Editors), Macmillan, Coimbatore, First Published 2009. PP. 293.

என். ரமணி மொழிபெயர்ப்பில் கோவை பாரதியார் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள கலைஞரின் பாயும்புலி பண்டாரக வன்னியன் வரலாற்றுப் புதினத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

## சிறுகதைகள்

**கிழவன் கனவு,** அஜிஸ் பதிப்பகம், திருவாரூர், முதற்பதிப்பு, 1945, பக்.24; தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1946; பாரதி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு, 1989, பக்.20; தலைவர் கலைஞர் 81வது பிறந்தநாள் மலர், முரசொலி, சென்னை, 2005, பக்; 8-15.

1940- களில் கலைஞர் எழுதி வெளியிட்ட அவரது முதல் நூல் என்ற பெருமை பெற்ற இந்நூல், கலைஞரது இளமைக்காலத்து எழுச்சித்துடிப்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இக்கதை இளைஞன் ஒருவனின் உள்ள எழுச்சி உடைப்பெடுத்து ஓடுவதையும், அவனது பெற்றோரைத் தாக்கிய ஆரியம் அவனிடம் அணுக அஞ்சுவதையும் படம்பிடித்துக் காட்டுகிறது.

**பிள்ளையோ பிள்ளை,** செந்தமிழ்ப் பதிப்பகம், புதுக்கோட்டை, 1948, பக்.30....................




**கயிற்றில் தொங்கிய கணபதி,** அறிவுப்பண்ணை, ஜூலை 1949, பக்.14; முன்னேற்றப் பண்ணை, சென்னை, நான்காம்பதிப்பு, .........., பக். 14.

இருபத்தி நான்கு வயதான இளைஞன்: எழில் நிறைத் தமிழன் கணபதி கயிற்றில் தொங்க நேரிட்டது... கதியற்றவராய்... காப்பாற்ற நாதியற்றவராய்... ஏன் என்பதற்கானக் காரணத்தைக் கண்டு விளக்கும் கலைஞர் அவர்களின் சிறுகதை.

**தப்பிவிட்டார்கள்,** பொன்னி-பொங்கல் மலர், முருகு சுப்பிரமணியம், புதுக்கோட்டை, 1950, பக். 18-21; திராவிடன் பதிப்பகம், வேலூர், 1952, பக்.32; கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 593-598.

மேட்டுக்குடியினர் பொருளாதார வளம் காரணமாக வளமிக்க, இன்பமான பொழுது போக்கு நிறைந்த வாழ்க்கை வாழ்வதையும், அவர்களில் சிலர் தீயசெயல்களில் ஈடுபடும் கொடுமையையும் இக்கதை விளக்குகிறது. ஏழைகளுக்கு இழைக்கப்படும் அநீதியைக் கதைக் கருவாகக் கொண்டுள்ளது.

**நாடும் நாடகமும்,** திராவிடப்பண்ணை, திருச்சி, முதற்பதிப்பு, 1953; இரண்டாம் பதிப்பு, 1968, பக்.72.

சந்தனக் கிண்ணம்
ஆலமரத்துப் புறாக்கள்
ஆதரிக்கிறார்
தொத்துக்கிளி
இரகசியம்
தெருக்கூத்து

ஆகிய ஆறு சிறுகதைகளின் தொகுப்பு. சரித்திர உண்மைகளை, சமுதாயக் கீறல்களை நாடகப் பாணியில்

நறுக்குத்தெரிக்கும் வார்த்தைகள், அரசியல் கிண்டல்கள் நிறைந்தது. இறுதியில் நாடும் நாடகமும் என்ற தலைப்பில் கலைஞர் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவும் இடம் பெற்றுள்ளது.

**தாய்மை,** மோகன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 1956, பக்.87.

குடும்பச் சிக்கலை மையமாகக் கொண்டு, தாய்மையின் சிறப்பை உணர்த்தும் `தாய்மை' என்னும் சிறுகதை, பகுத்தறிவுப் பிடிப்புடன் மூடநம்பிக்கையைப் போக்கிட மலர்ந்த `ஆட்டக் காவடி' என்னும் இவ்விரு சிறுகதைகளுடன் நடுத்தெரு நாராயணி, அரும்பு ஆகிய குறும் புதினங்கள் சேர்ந்த நான்கு கதைகளின் தொகுப்பு.

**கண்ணடக்கம்,** முத்துவேல் பதிப்பகம், திச்சிராப்பள்ளி, 1957, பக்.79. கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 599-604.

கலைஞரின் சிறுகதைகளின் இலக்கிய மதிப்பீட்டில் நிமிர்ந்து நிற்கும் கொள்கைகளுள் ஒன்று கடவுள் மறுப்பு. காளி என்னும் பாத்திரத்தைத் தலைமைப் பாத்திரமாகக் கொண்டு, உயிர்ப்பாக்கம் என்னும் உத்தியின் ஊடாகக் கடவுள் மறுப்புக் கொள்கையை எடுத்துச் சொன்ன கதை.

**நெருப்பு,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1957, பக். 8.

சந்தேகம் என்கிற பேய் எப்படி வாழ்க்கையை அழித்துவிடும் என்பதை நண்பர்கள் இருவரின் கதை கொண்டு விளக்கும் கலைஞரின் சிறுகதை.

**தப்பவில்லை,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1958, பக்.160-165..........

**தேனலைகள்,** முத்துவேல் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, 1958, பக்.105; பாரதி பதிப்பகம், சென்னை, மே 1982; நான்காம் பதிப்பு. அக்டோபர் 1985, பக்.104.

தான் கையாளும் தமிழ்நடையை முற்றிலும் மாற்றி, தமிழகத்தின் வரலாற்றுப் பெருமைகளை, இலக்கிய வளங்களைப் புத்தம் புதிய நடையின் துணைகொண்டு கவிதையுமல்ல, உரைநடையுமல்ல... கவிதை நடைச் சிறுகதைகள் என்றவாறு குறிப்பிட்டு முத்தாரம் திங்களிதழில் கலைஞர் அவர்கள் எழுதி வெளிவந்த

முத்தாரம்
மயிலிறகு
முத்துமாலை
மருதாணி
முறம்
யாழ்
ஆண்டு விழா
சேவல் சண்டை
சிற்பி
அருவி
வீரக்குலத்தான்
மடல்

ஆகிய பனிரெண்டு சிறுகதைகளின் தொகுப்பு நூல்.

**மதுரைச் செலவு,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1960, பக்.16-22.

கோவலன் கண்ணகி கதையை அடிப்படையாகக் கொண்டு கலைஞர் எழுதிய புதுமைச் சிறுகதை.

**இலட்சியவீரன்,** அறப்போர் கழக மலர்,................., ................., 1961, பக். 18-19.......

இலட்சிய வீரனுக்கு அவன் பயணிக்கும் பாதை மட்டுமே முக்கியம் என்பதை வலியுறுத்தும் சிறுகதை.

**சுமந்தவள்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1961, பக், 86-93; கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 571-580.

தாய்மைப் பேற்றின் உயர்வைக் காட்டும் வகையில் எழுதப் பெற்ற இச்சிறுகதை, தான்பெற்ற மகளுக்குப் பால் கொடுத்தால் அழகும் இளைமையும் போய்விடும் என்று எண்ணும் சௌந்திரியைக் காட்டுகிறது. கருவைச் சுமந்தவள் தாயாக மாட்டாள்; அதைப் பேணி வளர்ப்பவளே தாயாவாள் என்பதை இக்கதை உணர்த்துகிறது.

**கொன்று வருக,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1962, பக். 32-37.

கண்ணகியின் காற்சிலம்பை விற்கச் சென்ற கோவலன் கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டு கொல்லப்பட்டதை விளக்கும் கலைஞரின் சிறுகதை.

**நரியூர் நந்தியப்பன்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1966, பக். 43-44; முரசொலி- மணிவிழா மலர், முரசொலி, சென்னை, 2002, பக். 216-217.

சமுதாயத்தின் விடியாத பிரச்சினைகளை விளக்கிக் காட்டும் கலைஞரின் எழுச்சியூட்டும் எழுத்தில் உருவான கடித வடிவச் சிறுகதை

**குப்பைத்தொட்டி,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1966, பக். 50-55; முரசொலி-முப்பெரும் விழாமலர், முரசொலி, சென்னை, 1997, பக். 8-13; கலைஞர்கள் பார்வையில் கலைஞர், சவுத் இந்தியா பப்ளிகேஷன்ஸ், சென்னை, ஜுன் 2007, பக். 140-144; கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 587-592.

தாருகாவனத்துத் தபோதனர்களின் கர்ணகடூரமான காமச் சேட்டைகளைக் காட்டும் இச்சிறுகதை, மனிதன் மனதில் எழும் பலவகையான எண்ணக் குப்பைகளைத் தோலுரித்துக் காட்டுகிறது. மனிதன் மனிதனாகச் செயல்பட்டால் சமுதா யத்தில் சீர்திருத்தம் மிளிரும் என்பதை வலியுறுத்துகிறது.

**நுனிக்கரும்பு,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1966, பக். 59-62; முரசொலி - மணிவிழா மலர், முரசொலி, சென்னை, 2002, பக். 40-43.

அருள்நம்பி போன்ற அற்பர்கள் அமுதா போன்ற அழகு நங்கைகளின் ஓரவிழிப் பார்வைக்கு ஏங்கித் தவிப்பதைக் காட்டுவதுடன் இச்சிறுகதை சமுதாயத்தில் நிலவும் வர்க்க வேறுபாடுகளையும் எடுத்துக்காட்டுகிறது.

**சீரழித்த சிரிப்பு,** காஞ்சி-பொங்கல் மலர், அண்ணா, சின்னக் காஞ்சிபுரம், 1966, பக். 91-92.

வேல்ஸ் இளவரசனின் மனைவி கரோலினின் சிரிப்பு காணாமல் போனதையும் அவள் வாழ்வு இருளில் தள்ளப்பட்டதையும் விளக்கும் கஞைரின் வரலாற்றுச் சிறுகதை.

**காசா லேசா,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1966, பக். 65-70; முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1994, பக். 26-31.

கையூட்டு எல்லா நிலைகளிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பாங்கைச் சொல்லும் கலைஞரின் சிறுகதை.

**FLAME,** Rising Sun Publications, Madras, First Edition, 1970, pp.27.

The Short stories

FLAME
DUST BIN
THREE HUNDRED RUPEES
TEMPTATION
A SUSPENSE STORY
A MAN OF REPOTATION
THE LAST SCENE

are compiled in this book



**கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள்,** பாரதி நிலையம், சென்னை, முதற்பதிப்பு,1971; இரண்டாம் பதிப்பு, மே 1982, மூன்றாம் பதிப்பு, டிசம்பர் 1986, பக். 250.

சமுதாய, பொருளாதார, சமய மதிப்பு அடிப்படையில் காணப்படும் சமுதாய அவலங்களைச் சுட்டிக் காட்டுவதுடன், மூடநம்பிக்கையின் துணைகொண்டு மக்களை ஏமாற்றும் அவலநிலையையும், சமயநம்பிக்கையின் காரணமாக மக்களிடையே பகுத்தறிவுக்கொவ்வாத மூடநம்பிக்கைகள் நிலவுவதையும், பொருளாதார மேம்பாடுமிக்க மேட்டுக்குடியினர் சிலர் தீயசெயல்களில் ஈடுபடுவதையும் சுட்டிக்காட்டி கலைஞர் முரசொலியில் எழுதிய

1. புகழேந்தி
2. நளாயினி
3. சபலம்
4. ஆட்டக்காவடி
5. குப்பைத்தொட்டி
6. சந்தனக்கிண்ணம்
7. சங்கிலிச்சாமி
8. கங்கையின்காதலி
9. தாய்மை
10. தப்பிவிட்டார்கள்
11. தப்பவில்லை
12. ஆதரிக்கிறார்
13. இரகசியம்
14. முந்நூறு ரூபாய்
15. ஏழை
16. ஒரிஜினலில் உள்ளபடி
17. பனங்குலை
18. செத்தவன் கதை
19. பிரேத விசாரணை
20. கண்டதும் காதல் ஒழிக
21. ஆலமரத்துப் புறாக்கள்
22. தொத்துக்கிளி
23. காதல் கடிதம்

24. கண்ணடக்கம்
25. வாழமுடியாதவர்கள்
26. அபாக்கிய சிந்தாமணி
27. பாலைவனரோஜா
28. புரட்சிப்படம்
29. திடுக்கிடும்கதை
30. கடைசிக்கட்டம்
31. ஐயோ ராஜா
32. விஷம் இனிது
33. வேணியின் காதலன்
34. அமிர்தமதி
35. சுமந்தவள்
36. சித்தார்த்தன்
37. நுனிக்கரும்பு

ஆகிய 37 சிறுகதைகளின் தொகுப்பு.

TRANSPLANTATION OF EYE, T. Natarajan (Trans), Madurai Kamaraj University, Madurai, 1973, pp.41.

கலைஞர் எழுதிய கண்ணடக்கம் என்னும் சிறுகதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

**சபலம்,** காஞ்சி-சிறப்பு மலர், காஞ்சி, அண்ணா, சின்னக் காஞ்சிபுரம், 1974, பக். 407.

ஆதிக்க இனத்திற்கே உரிய சந்தேகத்தாலும், சபலத்தாலும் செம்மாந்திருந்த ஒரு குடும்பம் சீரழிந்த கதை. மனைவியின் மீது சந்தேகப்பட்டு குழந்தையைக் கொன்ற கணவனின் அற்பப் புத்தியைப் படம்பிடித்துக் காட்டும் சிறுகதை.




FRUIT BASKET, J. Jesuraja, (Trans.), Madurai University, Madurai, 1974, pp.68.

கலைஞரின் பழக்கூடை என்னும் சிறுகதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

**நளாயினி,** திராவிடப்பண்ணை, திருச்சிராப்பள்ளி, நான்காம் பதிப்பு, 1976, பக்.78.

புராண இதிகாச எதிர்ப்புணர்வை மையமாகக் கொண்டமைந்த நளாயினி' உள்ளிட்ட




காதல் கடிதம்
புரட்சிப்பாடம்
நாட்டிய கலாராணி
விஷம் இனிது
பாலைவனரோஜா
அய்யோ ராஜா
மானம்

ஆகிய எட்டுச் சிறுகதைகளின் தொகுப்பு நூல்.

**பனங்குலை,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1977, பக். ..., முரசொலி-மணிவிழா மலர், முரசொலி, சென்னை, 2002, பக். 108-110.

இளம்பெண் கமலத்தை அடைய வேண்டும் என்ற ஆவலில் அண்ணன் தங்கை என்று அபாண்டம் சுமத்தி உண்மையான காதலர்களைப் பிரித்திட்ட மோதகவிநாயகம் பிள்ளையின் வேடத்தைக் காட்டும் சிறுகதை, இப்படியும் சில பிறவிகள் உலகத்திலே உண்டு என்பதைச் சொல்கிறது.

**பழக்கூடை,** திராவிடப்பண்ணை, திருச்சிராப்பள்ளி, 1979, பக்..............

இத்தொகுப்பில், தொடர்கதை, பழக்கூடை, அபாக்ய சிந்தாமணி, கடைசிக்கட்டம், ஆகிய சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. Dramatic modes of Narration-இல் கதை சொல்லும் திறன் கொண்டவர் கலைஞர் என்பதற்கு இச்சிறுகதைத் தொகுப்பு சிறந்த சான்றாகும்.

**முடியாத தொடர்கதை,** தமிழோசை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, செப்டம்பர் 1982, பக்,91.

பெற்ற பிள்ளையை விற்ற தாய்
காசா லேசா
சீமான் வீட்டு சீக்காளி

நந்தியூர் நரியப்பன்
முடியாத தொடர்கதை

ஆகிய ஐந்து சிறுகதைகளின் தொகுப்பு நூல்.

**கலைஞரின் குட்டிக்கதைகள்,** பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1984, பக்.50.

சமயம், பொருளாதாரம், அரசியல் , பண்பாடு ஆகியனவற்றின் அடிப்படையில் காணப்படும் சமூக அவலங்களைச் சுட்டிக் காட்டும் வகையில் கலைஞர் சொன்ன 34 குட்டிக் கதைகளின் தொகுப்பாக அமைந்துள்ள இந்நூல் கலைஞரின் மணி விழா வெளியீடாகும்.

**16 கதையினிலே,** திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1995; மூன்றாம் பதிப்பு, டிசம்பர் 2006, பக்.177.

சமுதாயம் குறித்த கலைஞரின் சிந்தனை வெளிப்பாடாக அமையும்

1. காந்தி தேசம்
2. அணில் குஞ்சு
3. கொள்ளைப்புரம்
4. எழுத்தாளர் ஏகலைவன்
5. மலரவில்லை
6. சுமந்தவள்
7. புகழேந்தி
8. நளாயினி
9. குப்பைத் தொட்டி
10. சங்கிலிச்சாமி
11. தப்பிவிட்டார்கள்
12. தப்பவில்லை
13. ஏழை
14. கண்ணடக்கம்
15. வாழ முடியாதவர்கள்
16. அய்யோ ராஜா

ஆகிய 16 சிறுகதைகளின் தொகுப்பு நூல்

**திராவிட இயக்க எழுத்தாளர் கலைஞர் கருணாநிதி சிறுகதைகள்,** பூர்ணிமா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 1997, பக். 84-104.

குப்பைத்தொட்டி
ஏழை
கண்ணடக்கம்
சபலம்
ஒரிஜினலில் உள்ளபடி
நடுத்தெரு நாராயணி
சங்கிலிச்சாமி
தொத்துக்கிளி
நண்பன்
பிரேத விசாரணை

ஆகிய 10 சிறுகதைகளின் தொகுப்பு நூல்

**காணாமல் போன கடிகாரம்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 2002, பக்.8-11.

சிறைக் கொட்டடியில் காணாமல் போன கடிகாரம் கிடைத்திட்ட பாங்கைச் சொல்லும் கதை.

**கலைஞர் சொன்ன கதைகள்,** பாரதி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2008, பக்.79.

பேசும் கலை வளர்ப்போம்
குறளோவியம்
நெஞ்சுக்கு நீதி

ஆகிய நூல்களிலும், எழுதிய கடிதங்களிலும், ஆற்றிய சொற்பொழிவுகளிலும் கலைஞர் எடுத்துச்சொன்ன 40 கதைகளின் தொகுப்பு நூல்.

**காந்தி தேசம்,** கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 549-556.

காந்திதாசனின் தாய் தாம் வழுவிய நிலையிலும் ஈட்டிய பொருளைக் கொண்டு மகன் வழியாகப் பல அபலைகளைக் காப்பாற்ற வழி செய்வதை வருத்தத்தோடு விவரிக்கும் இச்சிறுகதை, காந்தியடிகள் கற்பித்த நெறியான வாழ்வை,

பெண்மையப் போற்றும் முறையில் நடைமுறையில் எப்படிக் கடைப்பிடிக்கிறது என்பதைக் காட்டுகிறது.

**அனில் குஞ்சு,** *கலைஞர் களஞ்சியம்*, Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 557-562.

இராமரோடு அணிலுக்கு உறவு கற்பித்தமையால் அணில் சாகவேண்டிருந்தது என்பதைச் சொல்லும் இச்சிறுகதை, இந்த நாட்டில் சமய நல்லிணக்கம் இன்மையைச் சுட்டிக்காட்டுகிறது.

**எழுத்தாளர் ஏகலைவன்,** *கலைஞர் களஞ்சியம்*, Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 563-570.

கடற்கரையில் சுண்டல் விற்றுப் பிழைக்கும் ஏழைச் சிறுவனின் வாழ்க்கை அவலத்தைப் படம்பிடித்துக் காட்டும் இச்சிறுகதையில் கற்பனையாகக் கதை எழுதக் கடற்கரைக்கு வந்த எழுத்தாளர் சிறுவனின் உண்மைக் கதையைக் கேட்டுக் கண்ணகியைப் போல் சிலையாகி நிற்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நளாயினி,** *கலைஞர் களஞ்சியம்*, Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 581-586.

புராண உலகம் புனைந்து காட்டும் நளாயினியைப் பகுத்தறிவுப் பார்வையால் அளப்பதே நளாயினி கதையாகும். புராண உலகம் கற்பிக்கும் கற்பு எத்தகைய பொய்ம்மையானது என்பதைக் கலைஞர் இச்சிறுகதையில் எடுத்துக் காட்டுகிறார்.

மணமகாத இளம்பெண் தான் பெற்ற பச்சைச் சிசுவைக் கழுத்து முறித்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுப் போவதாக முடியும் இச்சிறுகதை, குப்பைத் தொட்டியே தன் கதையைக் கூறுவதாக அமைந்துள்ளது.

**அய்யோ, ராஜா!** *கலைஞர் களஞ்சியம்*, Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 605-610.

உடல் தினவு பெற்றவர்களுக்கு விருந்தாகும் கோடம்பாக்கம் ரயில்வே கேட் அருகில் சாலையோரம் பலகார வியாபாரம் செய்யும் கைம்பெண் முத்தம்மாவின் கதை. அபலைகளின் வாழ்வுக்கு இச்சமூகத்தில் பாதுகாப்பின்மையைக் காட்டுகிறது.

**As is in the original,** Maruthanayagam .P and V. Murugan (Editors), Macmillan, Coimbatore, First Published 2009. PP. 120.

முனைவர் பி. ராஜா மொழிபெயர்ப்பில் கலைஞரின் 25 சிறுகதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

## நாடகங்கள்

**நச்சுக்கோப்பை,** திராவிடன் பதிப்பகம், வேலூர், 1943; தமிழ்க்கனி பதிப்பகம், முதற்பதிப்பு, 1952; நான்காம் பதிப்பு, மே 1954; ஐந்தாம் பதிப்பு, மே 1994; ஆறாம் பதிப்பு, டிசம்பர் 1999; ஏழாம் பதிப்பு, பிரவரி 2004. பக்.64; கலைஞர் களஞ்சியம் Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 777-824.




இலாயத்திலே தள்ளி அடைக்கப்படும் குதிரைக்குக்கூடச் சிறிது கனைத்திட உத்தரவு உண்டு. அதுகூட இல்லையே இந்த நாட்டுப் பெண்களுக்கு என்பதைச் சொல்லும் நாடகம். சமுதாயத்தின் அறியாமையைப் போக்கும் வகையில் 1943-இல் கலைஞர் எழுதி, நடித்த முதல் நாடகம். சொற்சுவையும் கருத்துச் சுவையும் பூத்துக் குலுங்கும் இந்நாடகம் சாந்தா (அ) பழனியப்பன் என்ற பெயரிலும் நிகழ்த்தப்பட்டுள்ளது. காதல், பெண்ணடிமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, மதுவின் அவலம், மூடநம்பிக்கை, கடவுள் மறுப்பு, விதவை மறுமணம் ஆகியன குறித்துப் பேசும் இந்நாடகம் 18 காட்சிகளைக் கொண்டது.

**பலிபீடம் நோக்கி,** எரிமலை பதிப்பகம், துறையூர், 1947, பக்.32.

சமுதாயப் புரட்சியில் ஈடுபடுவோர் முதலில் சமயத்தையே தாக்குவர் என்பதற்கிணங்க, சமயத்திலிருந்து மக்களை விடுதலை செய்யும் முயற்சியின் விளைவாக எழுந்த நாடகம்.

**ஒரே முத்தம்,** பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, ஜூன் 1950; இரண்டாம் பதிப்பு, நவம்பர் 1950; மூன்றாம் பதிப்பு, அக்டோபர் 1951; நான்காம் பதிப்பு, மார்ச் 1956; ஐந்தாம் பதிப்பு, டிசம்பர் 1964, பக். 128.

இலங்கையில் நிகழ்ந்த ஒரு வரலாற்று நிகழ்வின் சிறு சிதறலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற்று நாடகம். தேவி நாடக சபையினரால் நிகழ்த்தப்பட்டது. சாதி ஒழிப்பு குறித்தும் இந்நாடகம் பேசுகிறது.

**தூக்குமேடை,** திராவிடன் பதிப்பகம், வேலூர், 1951, பக். 144; தமிழோசைப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மே 1982, பக். 149.

எழுச்சிமிக்க வசனங்களால், தமிழ் நாட்டு இளைஞர்கள் மத்தியில் ஒரு பெரிய கிளர்ச்சியை உருவாக்கிய நாடகம். பலமுறை அரசால் தடை செய்யப்பட்டும் வெவ்வேறு பெயர்களில் துணிந்து நடத்தப்பட்டது. இந்நாடகம் குறித்துக் கலைஞர் அவர்களின் வார்த்தைகளில் குறிப்பிடுவதானால்...

`பொழுது விடியும்-
புறப்படுவான் கதிரவன்
கிழக்கு திசையில்!
அவன் புறப்பட்டால்தான்
பொழுதே விடியும்
அந்த நெடிய பயணம்
நிற்கவே நிற்காது!

அந்தப் பயணத்தில் குறுக்கிடும் கோணல்மதி கொண்டோர் சிலரையும் அவர்களை எதிர்த்திடும் கொள்கைச் சீயங்கள் சிலரையும் நாட்டுக்குக் காட்டுவதே இந்தத் தூக்குமேடை'

**பரப்பிரம்மம்,** திராவிடப்பண்ணை, திருச்சிராப் பள்ளி, முதற்பதிப்பு, 1953, பக்.76.

சமூகச் சீர்திருத்தக் கருத்தும் கதைப் பிடிப்பும் கொண்ட பராசக்தி திரைப்படத் திற்குத் தினமணி நாளிதழ் எழுதிய விமர்சனத் திற்குப் பதிலடியாக கலைஞர் எழுதிய உருவக நாடகம். காங்கிரசு எதிர்ப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, தமிழ்ப்பற்று, பகுத்தறிவு போன்ற திராவிட இயக்கக் கொள்கை விளக்கமாகவும் இந்நாடகம் அமைந்துள்ளது.

**மணிமகுடம்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை,

1955, பக்.280-316; முத்துவேல் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, 1956; இரண்டாவது பதிப்பு, 1960, பக்.149; பாரதி பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு, 1986; ஐந்தாவது பதிப்பு, அக்டோபர் 2001, பக்.160.

மேரி காரல்லி எழுதிய டெம்போரல் பவர் என்னும் புதினத்தின் அரசன் கதாபாத்திரத்தை மையமாகக் கொண்டு நவீனக் காலத்தை நோக்கிப் பயணிக்கிற ஒரு காலகட்டத்தில் கதை நடப்பதாக எழுதப்பட்ட நாடகம். மதம் - ஆட்சிபீடம் - பிரச்சார பீடம் இம் மூன்றனுக்கும் மக்களுக்கும் இடையில் நடைபெறும் போராட்டமே இந்நாடகம். மதகுருவாக இருக்கிற ஒருவர் எப்படியெல்லாம் அரசனை ஆட்டிப்படைகிறார் என்பதை எடுத்துச் சொல்லும் இந்நாடகம் 1962 மதுரையில் நடைபெற்ற தி.மு.க. மாநாட்டில் நிகழ்த்தப்பட்டது.

**கிரேக்கப் பெரியார்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1956, பக். 64-73.

சாவுக்குப் பயப்படாத முதல் மனிதன் என்று போற்றப்படும் கிரேக்கம் தந்த தத்துவா சிரியன், ஏதென்ஸ் அளித்த ஒப்பற்ற அறிவுப் புதையல் சாக்ரடீஸ் அறிவுலக ஜோதியாக நடமாடியதைச் சித்திரிக்கும் நாடகம்.

**பரதாயணம்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1956, பக். 25-31.

முதற்பகுதி வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டும், பிற்பகுதி கற்பனை யிலும் அமைந்த கலைஞர் அவர்களின் கதாகா லட்சேப வடிவம்.

**மகான் பெற்ற மகன்,** திராவிடப்பண்ணை, திருச்சி, முதற்பதிப்பு, ......., பக். ..........; பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1985; இரண்டாம் பதிப்பு, அக்டோபர் 1998; மூன்றாம் பதிப்பு, டிசம்பர் 1999, பக்.183.

1953-இல் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்று திருச்சி மத்தியச் சிறைச் சாலையில் இருந்த காலத்தில் கலைஞரால் எழுதப்பட்ட நாடகம். அம்மையப்பன் என்ற பெயரில் நூற்றுக்கணக்கான மேடைகளில் நிகழ்த்தப்பட்ட இந்நாடகம், ஆங்கில மொழி நாவல் ஒன்றின் உந்துதலால் எழுந்த கற்பனை யின் விளைவு.

**உதயசூரியன்,** முத்துவேல் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, பிப்ரவரி 1958; இரண்டாம் பதிப்பு, 1959, பக்.128.

1957 பொதுத்தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் கழகம் போட்டியிட்டு, கழகத்தினர் 15 பேர் தமிழகச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சூழலில் காங்கிரசின் சீர்கேட்டை விளக்கவும், கழகத்தின் சிறப்பை மக்களுக்கு எடுத்துச் சொல்லவும் எழுதப்பட்ட நாடகம்.

**இளங்கோ துறவு,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1959, பக், 18-23.

இளங்கோவடிகளின் துறவு குறித்துக் கலைஞர் எழுதிய கருத்தாழமிக்க நாடகம்.

**சிலப்பதிகாரம் நாடகக்காப்பியம்,** அஞ்சுகம் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1967, பக்.72.

பழங்கதைகளை நாடகமாக்கும் முயற்சி யின் விளைவாக; கோவலன் கண்ணகி கதையை முழுமையாக உரைக்கும் முறையில்; தமிழினத் தின் சிறப்பைக் கூறி இன்பமுற; பறைசாற்ற; மூலக்கதையில் இளங்கோவடிகள் கொண்ட கருத்துக்கு மேலும் வலுவூட்டும் மாற்றங் களுடன் கலைஞர் அவர்களால் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டதே சிலப்பதிகாரம் நாடகக் காப்பியமாகும்.

**காகிதப்பூ,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, சனவரி 1967, பக்.126.

பேசப்படும் சோசலிசம் என்பது பளபளப்பி லே-பார்வையிலேதான் பாரிஜாதப்பூ... ஆனால் உண்மையில் அது ஒரு காகிதப்பூ என்பதை எடுத்து விளக்கும் நாடகம்.

**திருவாளர் தேசியம்பிள்ளை,** சித்ரா நிலையம், சென்னை, முதற்பதிப்பு 1967; இரண்டாம் பதிப்பு, 1972; மூன்றாம் பதிப்பு, 1976, பக். 95; அன்பு நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1967, பக். 95.

காங்கிரசு கட்சி வீழ்ச்சிக்குத் தள்ளப்பட்டு விட்டதையும், இளைஞர்களிடையே தமிழ் உணர்வும், உதயசூரியனின் தாக்கமும் விரைந்து எழுவதையும் உணர்த்தும் இந்நாடகம், சமூக சீர்திருத்தம் தொடங்கப்பட வேண்டிய இடமே முதலில் அறியாமை படைத்த பெண்களிடம் தான் என்பதை எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது.

**TALE OF THE ANKLET SILAPPATHIKARAM,** Anchukam Publications, Madras, 1968, pp. 80.

சிலப்பதிகார நாடகக் காப்பியத்தின் ஆங்கில வடிவம், டி.ஜி. நாராயணசாமி அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

**நானே அறிவாளி,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, சனவரி 1971, பக். 39.

வெற்றி கிட்டும்போது வெறியாட்டம் போடுவதும், தோல்வி ஏற்படும்போது துவண்டு விடுவதும் பொதுவாழ்வில் இருப்பவர்களுக்குக் கூடாது என்பது இந்நாடகம் முன்வைக்கும் கருத்து நிலையாகும். மூடிக்கிடக்கும் விழி களைத் திறக்கத் தேவை பகுத்தறிவு மூலிகை களே என்பதைச் சொல்லும் இந்நாடகத்தில் `அடக்கம்' என்னும் பெயரை ஒரு கதாப்பாத்திரத்திற்கு வைத்துக் கலைஞர் ஆடும் சொல் விளையாட்டு குறிப்பிடத்தக்கதாகும்.

**பரதாயணம்,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1978, பக்.52.




கதாகாலட்சேபப் பாணியில் எழுதப்பட்டு, பகுத்தறிவுடன் சிந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் பரதாயணம் நாடகம் மற்றும் திரைப்படங்களில் இடம் பெற்ற

அனார்கலி
சாக்ரடீஸ்
சேரன் செங்குட்டுவன்

ஆகிய நான்கு தமிழ் நாடகங்களின் தொகுப்பு நூல்

**புனிதராஜ்ஜியம்,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1979, பக்.84.

கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விபச்சார விடுதிகளை நடத்துதல் போன்ற எல்லாக் குற்றங்களையும் காவல்துறையின் துணையுடன் நடத்துதல், நேர்மையாக நடக்க முயல்வோரைக் காவல்துறையின் துணைகொண்டு பழிவாங்குதல் போன்றனவற்றின் ஊடாக 1979-இல் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியின் அலங்கோலங்களை எடுத்து விளக்கும் நாடகம்.

**அனார்கலி,** முரசொலி-மணி விழா மலர், முரசொலி, சென்னை, 2002, பக்.168-171.

திரைப்படத்திற்காகக் கலைஞர் எழுதிய நாடகம். அக்காலத்தில் மிகுந்த பரபரப்பையும் பாராட்டையும் பெற்றது. மிகச்சில காட்சிகளில் ஒரு காதல் ஓவியத்தைத் தீட்டித் தந்திருக்கும் கலைஞரின் ஆற்றல் வியக்கத்தக்கது.

**யாழோசை,** முரசொலி-பொங்கல் விழா மலர், முரசொலி, சென்னை, 1961, பக். 16-20; முரசொலி-மணி விழா மலர், முரசொலி, சென்னை, 2002, பக். 22-25.

இந்திரவிழா முடிந்த நிலையில்

கடற்கரைக்குச் சென்ற கோவலனுக்கும் மாதவிக்கும் இடையே நடந்த ஊடலைத் தன் பாணியில் கலைஞர் அவர்கள் விளக்கிக் காட்டும் நாடகம்.

**கலைஞரின் நாண்மணிமாலை,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை,..., பக். 48.

பரதாயணம்
அனார்கலி
சாக்ரடீஸ்
சேரன் செங்குட்டுவன்

ஆகிய நான்கு நாடகங்களின் தொகுப்பு நூல்.

இந்நாடகங்கள் முறையே பகுத்தறிவைப் பரப்பிட, பாசமிகு காதலர்களின் அன்புப் பெருக்கை விளக்கிட, உலகைத் திருத்த முயன்ற உத்தமனின் மனஉறுதிக்கு மகுடம் சூட்டிட, தமிழரின் வீரம் திக்கெட்டும் வெற்றிக்கொடி நாட்டிய தீரமிகு வரலாறு சொல்ல எழுதப்பட்டனவாகும்.

**Tale of the Anklet & One Act Plays,** Maruthanayagam .P and V. Murugan (Editors), Macmillan, Coimbatore, First Published 2009. PP. 126.




முனைவர் டி.ஜி. நாராயணசாமி & எம்.டி. ஜெயபாலன் ஆகியோர் மொழிபெயர்ப்பில் கலைஞரின் சிலப்பதிகாரம் நாடகக் காப்பியம் மற்றும் 3 ஓரங்க நாடகங்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு.

## திரைப்படங்கள்

**மருதநாட்டு இளவரசி,** பைந்தமிழ்ப் பாசறை, கோவில்பட்டி, 1951, பக்.22.

1950-இல் வெளிவந்த இத்திரைப்படம் `பூக்காட்டைப் புறங்காணும் பூங்கழலாள் எங்கேயோ போய்விட்டாள். சாக்காட்டின்

அடிவாரத்திலும் அவளைச் சந்திக்க முடியாத பாவியாகி விட்டேன்' என்பன போன்ற உணர்ச்சிமிகு உரையாடல்கள் கொண்டு தமிழ்திரையுலகிற்கு ஒரு புதிய எழுத்து நாயகனாகக் கலைஞர் கிடைத்திட்டமையைப் பறைசாற்றியது.

**மந்திரிகுமாரி,** பைந்தமிழ்ப் பாசறை, கோவில்பட்டி, 1951, பக்....; எம்.எஸ்.ராமுலு கம்பெனி, சென்னை, ......., பக்.62; எஸ். இராமையா, கோவில்பட்டி, ......., பக். 64.

சக்தி நாடக சபாவிற்காக, ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசியை அடிப்படையாகக் கொண்டு, இலக்கியச் செறிவுடன் கலைஞர் எழுதிய நாடகத்தின் திரை வடிவம். `மணிப்புறாவுக்கு வலை வீசினால் மாடப்புறாவல்லவா சிக்குகிறது' என்னும் வசனம் கலைஞரின் வசனச் சிறப்பிற்குச் சான்றாகும்.

**பராசக்தி (திரைக்கதை வசனம்),** பராசக்தி மலர், போர்வாள் வெளியீடு, சென்னை, 1952, பக். 33-56; ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை,..., பக். 55; அன்பன் அச்சகம், சென்னை, .........., பக். 60.

பலகாலமாக ஏற்றப்பட்டுள்ள மாசைப் பகுத்தறிவுக்கண் கொண்டு நீக்கி தூய்மை செய்வதையும் தெய்வத்தைச் சிந்திப்பதற்குப் பதிலாக தெய்வத்தைப் பற்றிய தவறான நம்பிக்கைகளைக் களைந்தெறிவதையும் நோக்கமாகக் கொண்ட திரைப்படம்.

'வானத்தை முட்டும் மாளிகைகள்....
மானத்தை இழந்த மனிதர்கள்......
உயர்ந்த கோபுரங்கள்.... தாழ்ந்த உள்ளங்கள்
தென்றலைத் தீண்டியதில்லை நான்...
ஆனால் தீயைத் தாண்டியிருக்கிறேன்'

என்பது பாரெங்கும் பேசப்படுகின்ற பராசக்தியின் வசனங்கள். நேஷனல் பிக்சர்ஸ் தயாரித்த இத்திரைப்படம் 1957 அக்டோபர் 17-இல் திரைக்கு வந்தது.

**திரும்பிப்பார்,** திராவிடப் பண்ணை, திருச்சிராப்பள்ளி, 1953, பக். 119; ரம்பாஸ் பிரஸ், சென்னை, ........, பக். 80.

மனிதன் தன்னை ஒரு முறை திரும்பிப் பார்ப்பது நல்லது; அவ்வாறு திரும்பிப் பார்ப்பின் அது அவனை நல்வழியில் நடக்கத் தூண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்கில் அமைந்தது கலைஞரின் திரைக்கதை-வசனத்தில் உருவான இத்திரைப்படம்.

**வண்டிக்காரன் மகன்,** கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1978, பக். 86.

ஏமாந்த தமிழர்களின் தலையெழுத்தை மாற்ற எழுதுகோல் எடுத்த அண்ணா காஞ்சி ஏட்டில் எழுதிய வண்டிக்காரன் மகன் சிறு கதைக்குத் திரைக்கதை அமைத்துக் கலைஞர் அவர்கள் எழுதிய வசனம். புனிதர்களைப் போல இருக்கும் சுயநலக்காரர்களின் முகத்திரையைக் கிழிக்கும் இத்திரைப்படம் தோல்விகளை வெற்றியின் படிகளாக்கிக் கொள்ளும் வித்தை கற்ற ஒரு வீரனின் கதை.

**மனோகரா,** பாரதி பதிப்பகம், சென்னை, 9ஆம் பதிப்பு, 1985, பக். 104; திரை வளர்த்த தமிழ்-முதல் தொகுதி, டி.வி.டி.பப்ளிஷர்ஸ், சென்னை, முதல்பதிப்பு, 1987, பக்.105-125; கலைஞர் 84 அன்றும் இன்றும் என்றும், இசைவேளாளர் முற்போக்கு நலச்சங்கம், சென்னை, 2007, பக். 122-143; கலைஞரின் கலையுலகப் பொன்விழா மலர், சென்னை,....., பக்.7; கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 1137-1154.




வளர்ச்சிக்கு வித்திட்ட, சமூக மறுமலர்ச்சியை உருவாக்கிய மனோகரா திரைப்படத்திற்கு கலைஞர் அவர்கள் எழுதிய திரைக்கதை-வசனம்.

**ரங்கோன் ராதா,** திரை வளர்த்த தமிழ்-முதல் தொகுதி, டி.வி.டி.பப்ளிஷர்ஸ், சென்னை, முதல்பதிப்பு, 1987, பக். 126-141.

திராவிட நாடு இதழில் தொடராக வெளிவந்த அண்ணாவின் கதை. தன் சொந்த மைத்துனியின்மேல் காதல் கொண்டு தன் மனைவிக்குப் பேய்பிடித்துவிட்டது என்று கதைகட்டும் கோட்டையூர் தர்மலிங்க முதலியாரின் கதை. கலைஞரின் திரைக்கதை-வசனத்தில்.

**அரசிளங்குமரி,** திரை வளர்த்த தமிழ்-முதல் தொகுதி, டி.வி.டி.பப்ளிஷர்ஸ், சென்னை, முதல்பதிப்பு, 1987, பக். 142-157.

தந்தையிடம் அன்பு இல்லாத, மனைவியிடம் ஆசை இல்லாத, குழந்தையிடம் பாசம் இல்லாத, போர் வெறிகொண்டு அலையும் ஆணவக்காரன் வெற்றிவேலன் திருந்தியதால் அவன் வீட்டிலேயும், அந்த நாட்டிலேயும் அமைதி மீண்டதைச் சொல்லும் திரைப்படம்.

**நாம்,** திராவிடப்பண்ணை, திருச்சிராப்பள்ளி, .............., பக். 88; ஜீபீடர் பிக்சர்ஸ் & மேகலா பிக்சர்ஸ், சென்னை, ..........., பக்.16.

பகுத்தறிவு இயக்கத்தைக் கதைத் தலைவனாகக் கொண்டு கலைஞர் அவர்களின் திரைக்கதை வசனத்தில் உருவான திரைப்படம். முழுக்க முழுக்கத் தொழிலாளி வர்க்கத்தினுடைய குரலை முதன்மைப்படுத்தியும் பகுத்தறிவுச் சிந்தனையைப் புகுத்தியும் எழுதப்பட்டது.

**ஆடுபாம்பே-கதை வசனம்,** திரைக்கதிர்-மாத இதழ், சென்னை,......, பக். 77-97............

## திரை இசைப்பாடல்கள்

**கலைஞர் திரை இசைப்பாடல்கள்,** சிலோன் விஜயேந்திரன் (தொ.ஆர்), காந்தளகம், சென்னை, முதற்பதிப்பு, 1989, பக்.53.

1950 தொடங்கி 1988 வரையிலான காலத்தில் 16

திரைப்படங்களுக்குக் கலைஞர் எழுதிய நாற்பது திரை இசைப்பாடல்களின் தொகுப்பு.

எழுச்சித் தமிழ்
நேசத் தமிழ்
பாசத் தமிழ்
நகைச்சுவைத் தமிழ்

என்னும் பகுப்பில் இப்பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் படத்தின் பெயர், பாடல் எழுதப்பட்ட ஆண்டு, இசையமைப்பாளர் பெயர், பாடியோர் பெயர் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன.

## கவிதைகள்

**கவிதையல்ல,** அஜிஸ் பதிப்பகம், விஜயபுரம், திருவாரூர், முதற்பதிப்பு, 1945, பக்.23.

வாளேந்தி வெங்களம் புகும் இளங்காளைகளை வாகைசூட பாடி வீட்டிற்கு அழைக்கும்

வாளிங்கே
பெரியார்
களங்கண்டு
தோல்வி எப்பொழுது?
ஆரியமே எச்சரிக்கை
இன்னுமா கூச்சல்
வருணமா? மரணமா?
நியாயத்தராசு
ஏற்பாரோ?
சைவரே
வா!
எரிமலை!
யார் தேவை
பொதுஉடமையே
மாணவர் எழுச்சி

ஆகிய தலைப்புகளில் அமைந்த கலைஞரின் தொடக்ககால 15 கவிதைகளின் தொகுப்பு.

**மறத்தி,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1955, பக். 129-132.

தமிழ் பெண் ஒருத்தியின் வீரத்தைப் போற்றும் கலைஞரின் கவிதை.

**தென்னவன் கதை,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1956, பக்....

தென்னிலங்கை வேந்தன் இராவணனைத் தமிழ்ப்பண்பாட்டுக் காவலனாகக் காட்டும் கலைஞர் அவர்களின் கவிதை நடைச் சித்திரம். சான்றுக்குச் சிலவரிகள்.

என்னருமை வீரர்களே! ஏற்றங்கொள்
தோழர்களே!
இன்றிந்த தென்னிலங்கை ஆண்டிருக்கும்
இராவணன் நான்
இழிதொழிலோர்-பண்பிழந்தோர்-எத்திப்பிழைப்போர்
அவரை நத்திக்கிடப்போர் அனைவரையும்
அரைநொடியில் அழித்துவிடப்
போர்க்கோலம் பூண்டுவிட்டேன்'

**இரணியன்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1957, பக். 25-32.

இரணியன் என்னும் தமிழ் மன்னனின் மாண்பு பேசும் கலைஞரின் கவிதை.

**தலைகேட்டான் தம்பி,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1958, பக். 18-23; முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1966, பக். 12-22; கழகக்குரல்-ஆண்டுமலர், சி.சிட்டிபாபு, சென்னை, 1975, பக். 10-11.

ஆவிதர நேரிடினும் அருந்தமிழர்க்கே தருவேனென்று வாழ்ந்த காவியுடை குமணனின் அருமையை விளக்கும்/ வாழ்க்கையைச் சொல்லும் கலைஞரின் கவிதை.

**வாளி மன்னன்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1958, பக்.88-96.

வாலி மன்னனுக்கு எதிரான சுக்ரீவன்-அனுமன் கூட்டுச் சதியினை விளக்கி எழுதப்பட்ட கவிதைச் சித்திரம். சான்றுக்குச் சிலவரிகள்.

‘முயற்கொம்பே, முடியுனக்கு சுக்ரீவா!
தெரிந்து கொள்
அயற்கொள்ளை தமிழ் நாட்டில்
பரவுதற்கு
அனுமனுடன் கூடிக் கொண்டு அண்ணனையும்
சாய்த்துவிட்டாய்!
தம்பியெனும் இலக்கணத்தின் விதிவிலக்கே!
நம்பிக்கைக் துரோகி!............

**பூமுடி,** முரசொலி-அண்ணாமலர், முரசொலி, சென்னை, 1965, பக். 3.

முரசொலி அண்ணா மலருக்காக அண்ணனுக்கு வாழ்த்துச் சொல்லி தம்பி கலைஞர் எழுதிய கவிதை.

**ஆந்தையும் அரசனும்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1965, பக்.25-3 முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, சனவரி 2001, பக். 10-11; முரசொலி-மணிவிழா மலர், முரசொலி, சென்னை, 2002, பக். 220-221.

‘பொற்புடைத் தமிழர் வாழ்வினில் அன்று
கற்புடை நட்பு மிளிர்ந்தது நன்று’

என்பதைக் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பின் வழிநின்று சொல்லும் கவிதை.

**மரபுகாப்போம்,** தென்னகம்-பொங்கல்மலர்,எஸ்.ஏ.இராமசாமி, சென்னை, 1970, பக்...

தென்னகம் வாசகர்களுக்கும் கழகத் தோழர்களுக்கும் கலைஞர் சொல்லும் பொங்கல் வாழ்த்து.

**வெல்வோம் வாழ்வோம்,** திருவிளக்கு-பொங்கல் பசுமைப்புரட்சி மலர், க.இராசாராம், சென்னை, 1970, பக். 15.

குடகுமலை உச்சியிலே கோலம் காட்டும் கலைஞரின் பொங்கல் வாழ்த்துக்கவிதை.

**காஞ்சிதான் அண்ணன்,** காஞ்சி-பொங்கல் மலர். சி.என்.ஏ. பரிமளம், காஞ்சிபுரம், 1970, பக். ...

அறிவுலக ஆசான் அண்ணனைப் பற்றித் தம்பி கலைஞர் எழுதிய கவிதை.




**PEARLS,** Rising Sun Publications, Madras, First Edition, 1970, pp.30.

A collection of Kalaignar's poems translated by T.G. Narayanaswamy.

**உழைக்கும் கரத்தை உயர்வாய் நினைப்போம்,** எண்ணம்-பொங்கல் மலர், ஆலடி அருணா,., 1973, பக்...

உழைப்போர் வாழ்வு உயர கலைஞர் சொல்லும் பொங்கல் வாழ்த்துக் கவிதைச் செய்தி

**வாழ்த்துக்கள் பரிமாறுவோம்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1973, பக்........; முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, சனவரி 2000, பக். 8-9.

வாழ்த்திப் பழகிய கலைஞர் கழக உடன்பிறப்புகளுக்கு முரசொலி வழி வழங்கிய பொங்கல் வாழ்த்து.

**தம்பியரை வாழ்த்திடுக,** அண்ணாமலர், சிந்தனையாளர் மன்றம், பூம்புகார், 1974, பக். 8-9.



தி.மு.கழகத்தினர் அனைவரையும் தம்பிமார் களாய் வரித்துக்கொண்ட பேரறிஞன் அண்ணா வைப் பற்றிய கவிதை.

**கலைஞரின் கவிதாஞ்சலி,** கழகக்குரல்-தி.மு.க. 5-ஆவது பொதுமாநாட்டு மலர், சி. சிட்டிபாபு, சென்னை, 1975, பக். 2-6.

வங்கக் கடலோரம் துயில் கொள்ளும் அண்ணாவிடம் இதயத்தை இரவலாகக் கேட்டு தம்பி கலைஞர் எழுதிய

கவிதாஞ்சலி.

**இந்திரஜித்,** முரசொலிபொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1959, பக்....; கழகக்குரல்-பொங்கல் மலர், சி.சிட்டிபாபு, சென்னை, 1975, பக். 9-11.

இந்திரஜித்தின் கதை கூறும் கலைஞரின் கவிதை.

**பொங்கலோ பொங்கல்,** திருவிளக்கு- பொங்கல் மலர், சென்னை, 1976, பக். 15-19.

கழகம் என்னும் விளக்கின் ஒளியில் வெற்றிகளைப் பெற்றிட சூளுரைக்கும் கலைஞரின் பொங்கல் வாழ்த்துக் கவிதை.

**என்றுமே பெரியார் அண்ணா நம் இதயத்தில் வாழவேண்டும்,** முப்பெரும் விழா மலர், அண்ணா பதிப்பகம்,சென்னை, 1988,பக். 5-10.

என்றுமே பெரியார் அண்ணா நம் இதயத்தில் வாழவேண்டும் என்பதை வலியுறுத்திக் கலைஞர் எழுதிய கவிதை.

**கலைஞரின் கவிதைகள்,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1977, பக். 299; பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1989, நான்காம் பதிப்பு, 1995, பக். 372.

சொல்வளமும், பொருட் சிறப்பும் சிந்தனைத் தெளிவும் கொண்ட கலைஞரின் கவிதைகள். 1945 முதல் 53 தலைப்புகளில் கலைஞர் எழுதிய கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. பாரதி பதிப்பக வெளியீட்டில், முதல் கவிதையாக, அண்ணா மறைந்த போது கலைஞர் எழுதிய கையறுநிலைப் பாடலாம் `இதயத்தைத் தந்திடு அண்ணா' என்னும் பாடலும், இறுதிக் கவிதையாக, `என் இனிய நண்பா! ஏன் பிரிந்தாய்?' என்னும் கவியரசு கண்ணதாசன் மறைந்த போது கலைஞர் எழுதிய இரங்கற்பாடலும் இடம்பெற்றுள்ளன. தமிழ்க்கனி பதிப்பக வெளியீட்டில், ஐம்பத்திரண்டு கவிதைகளில், `புறநானூற்றுத் தாய்' என்னும் கவிதை முதல் கவிதையாகவும், `கலைத்தாயின் தவச்செல்வன்' கடைசிக்

கவிதையாகவும் இடம் பெற்றுள்ளன. 53 கவிதைகளில் 28 கவிதைகள் கவியரங்கக் கவிதைகள். மற்ற 25 கவிதைத் தலைப்புகள் வருமாறு:

புறநானூற்றுத் தாய்-1
புறநானூற்றுத் தாய்-2
புறநானூற்றுத் தாய்-3
தென்னவன் கதை
இந்திரஜித்
இரணியன்
வாளி மன்னன்
தலைகேட்டான் தம்பி
நன்றி, நன்றி!
வானமே பொழிக நீ!
நியாயத் தராசு
ஏற்பாரோ?
புயல் என அறிக!
கேட்டதுண்டோ?
மாணவர் எழுச்சி
தோல்வி எப்பொழுது?
இன்னுமா கூச்சல்?
வாழ்க ஜீவா!
பச்சைக் கிளி
மறைந்த மாவீரன்
வருணமா? மரணமா?
கற்பனை ஊற்று
இன்றைக்கு உன்றன் பிறந்தநாள்
கலைத்தாயின் தலைச்செல்வன்
என் இனிய நண்பா ஏன் பிரிந்தாய்?




**பொங்கல் விழா, இனவுணர்வுத் திருநாள்,** நம்நாடு-பொங்கல் மலர், மு.கருணாநிதி, சென்னை, 1979, பக். ஈ-1.

நம்நாடு-பொங்கல் மலருக்குக் கலைஞர் எழுதிய பொங்கல் வாழ்த்துக் கவிதை.

**உதயசூரியன் உயர்ந்தான் இன்று,** முரசொலி-பொங்கல் மலர்,

முரசொலி, சென்னை, 1982, பக்..; முரசொலி மணி விழா மலர், முரசொலி, சென்னை, 2002, பக். 19.

உதயசூரியனின் எழுச்சியைச் சொல்லி கலைஞர் அவர்கள் எழுதிய பொங்கல் வாழ்த்துக் கவிதை.




**POEMS,** Dr. Krishna Srinivas (Trans), Poets Press India, Madras, 1989, pp. 64.

கலைஞர் எழுதிய 29 கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

**வாழ்க ஜீவா,** முரசொலி-பொன்விழா மலர், முரசொலி, சென்னை, 1992, பக். 376.

பொதுவுடைமைத் தலைவர் ஜீவா மறைவிற்கு இரங்கல் தெரிவித்து 20.1.63 முரசொலி நாளேட்டில் கலைஞர் எழுதிய கவிதை. சான்றுக்குச் சிலவரிகள்.

குருதியெல்லாம் புரட்சிமணம்
கமழுகின்ற வரிப்புலியை
கொள்கையிலே உறுதி கொண்ட
தமிழ்க் கவியைக்
கொள்ளையடித்து மகிழ்ந்ததோ
கொடுஞ்சாவு............

**கண்ணதாசா என் எண்ணமெல்லாம் இனிக்கும் நேசா,** முரசொலி-பொன்விழா மலர், முரசொலி, சென்னை, 1992, பக். 3-7.

கவியரசு கண்ணதாசன் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து 19.10.81 முரசொலி நாளேட்டில் கலைஞர் எழுதிய கவிதை.

'இளவேனில் கவிதையால்
இதயசுகம் தந்தவனே- உன்
இதயத் துடிப்பை ஏன் நிறுத்திக் கொண்டாய்!'

**யாருண்டு இனிமேலே?** முரசொலி-பொன்விழா மலர், முரசொலி, சென்னை, 1992, பக். 371-373.

'ஏழைகளைச் சிரிக்க வைத்தான்-
கோழைகளை நிமிரவைத்தான்-
எமையெல்லாம் கதறவைத்து இறப்புக்கு

ஏகிவிட்டான்'

என்பதாகக் கலைவாணருக்கு இரங்கல் தெரிவித்து கலைஞர் அவர்கள் 29.8.58 முரசொலியில் எழுதிய கவிதை.

**ஒருதலைக்காதல்,** திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 1998: இரண்டாம் பதிப்பு, நவம்பர் 2000, பக். 95.

சிறு தொடரோவியமாய், குறுங்காதல் காவியமாய் அமைந்த கலைஞரின் கவிதைக் காவியம். கலைஞரின் பவளவிழா வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல், வாழை மரங்களை வைரம் பாய்ந்த தேக்குகளாக்கிக் கோழைகளுக்கு முதுகெலும்பு வழங்கும் வல்லமை கொண்ட 17 கவிதைகளின் தொகுப்பு. பண்டைத் தமிழர் போற்றிய காதல், வீரம் என்னும் உணர்வுகளையும் கொண்டது.

**முற்போக்கு முழங்கட்டும்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, சனவரி 2004, பக். 8-9.

முற்போக்கு
முழங்கட்டும்!
முடிதிருத்தும் தொழிலாளர்
மூளியாகிப் போன இந்த
அரசின் முடியையும் திருத்தட்டும்'

என இக்கவிதை முடிகிறது.

**கலைஞரின் கவிதைமழை,** சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2004, பக். 1107.

சுயமரியாதை, பகுத்தறிவு, சமூகநீதி, பெண்ணுரிமை, திராவிட இனவுணர்வு, தத்துவம் என்பதான பாடுபொருட்களைக் கொண்ட கலைஞரின் கவிதைகளின் தொகுப்பு. கலைஞர் முதன் முதலாக எழுதிய `அணிவகுப்புப் பாடல்' என்ற அவரது கன்னிக் கவிதை தொடங்கி, முரசொலியில் 17.4.2004 அன்று எழுதிய `எதிர்ப்புத் தூளாகும்' என்னும் கவிதை வரை, கலைஞர் 66 ஆண்டு காலத்தில் எழுதிய

210 கவிதைகளை உள்ளடக்கிய செந்தமிழ்க் கவிதைக் களஞ்சியம்.

**காலப்பேழையும் கவிதைச்சாவியும்,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜுன் 2006, பக். 298.

வையம் உதிப்பதற்கு முன்னும், அது வாழத் தொடங்கிய பின்னும், வகைப்படுத்தா வாழ்க்கை முதல் நெறிவகுத்த மக்களின் நேற்று இன்று நாளைய வாழ்வு வரை அறிவதற்குத் துணை செய்யும் வகையில் 58 தலைப்புகளில் கலைஞர் எழுதியுள்ள கவிதைகளின் தொகுப்பு.

**பச்சைக்கிளி,** கலைஞர்கள் பார்வையில் கலைஞர், சவுத் இந்தியா பப்ளிகேஷன்ஸ், சென்னை, ஜுன் 2007, பக். 76-77.

1953-இல் திருச்சி மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் கலைஞர் அவர்கள் எழுதிய கவிதை.

**இதயத்தைத் தந்திடு, அண்ணா** கலைஞர் களஞ்சியம், Center for South Asian studies,university of California, Berkeley, First edition, 2008, பக். 420-433.

பேரறிஞர் அண்ணாவின் மறைவையொட்டி கலைஞர் செலுத்திய கவிதாஞ்சலி.

**உன் காலணியை வாழ்த்துகிறாய்!** கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 540-543.

தன் 58-ஆவது பிறந்தநாள் செய்தியாகக் கலைஞர் எழுதிய கவிதை.

**இன்றைக்கு உன்றன் பிறந்தநாள்,** கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 534-535.

15-7-76 அன்று காமரசர் பிறந்த நாளுக்கு வாழ்த்துச் சொல்லி கலைஞர் எழுதிய வாழ்த்துக் கவிதை. 15-5-76 அன்று முரசொலியில் வெளியானது.

**கதை சொல்லும் கலைஞரின் கவிதைகள்,** முரசொலி குமரப்பன் (தொ. ஆர்), செல்வக்குமார் பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு, 1989, பக்..

முரசொலி, நம்நாடு, கழகக்குரல் ஆகிய ஏடுகளிலும் சிறப்பு மலர்களிலும் எழுதிய கவிதைகள், வானொலி மற்றும் கவியரங்குகளில் வாசித்த கவிதைகள் எனக் கலைஞரின் 43 கவிதைகளின் தொகுப்பு.




**The Treasure Trove of Time and the Verse Key,** Maruthanayagam .P and V. Murugan (Editors), Macmillan, Coimbatore, First Published 2009. PP. 172.

ப. மருதநாயகம் மொழிபெயர்ப்பில் கோவை பாரதியார் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள கலைஞரின் காலப் பேழையும் கவிதைச் சாவியும் கவிதை நூலில் உள்ள 34 கவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு.




**Shower of Poetry Vol.1,** Maruthanayagam .P and V. Murugan (Editors), Macmillan, Coimbatore, First Published 2009. PP. 221.

முனைவர் ஆர். கணபதி மொழிபெயர்ப்பில் கலைஞரின் கவிதை மழையில் 52 கவவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு.




**Shower of Poetry Vol.2,** Maruthanayagam .P and V. Murugan (Editors), Macmillan, Coimbatore, First Published 2009. PP. 142.

முனைவர் ஆர். கணபதி மொழிபெயர்ப்பில் கலைஞரின் கவிதை மழையில் 40 கவவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு.




**Shower of Poetry Vol.3,** Maruthanayagam .P and V. Murugan (Editors), Macmillan, Coimbatore, First Published 2009. PP. 190.

முனைவர் வீ. முருகன் மொழிபெயர்ப்பில் கலைஞரின் கவிதை மழையில் 50 கவவிதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

## கவியரங்கக் கவிதைகள்

**விடுதலை வீரர்கள்,** முரசொலி-அண்ணாமலர், முரசொலி, சென்னை, 1967, பக். 3. கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 51-57.

15.08.67 அன்று திருச்சி வானொலி நிலையத்தில் நடைபெற்ற `விடுதலை வீரர்கள்' என்னும் தலைப்பிலான கவியரங்கிற்குத் தலைமையேற்றுக் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.




**விடுதலை வீரர்கள் ஐவர்,** திருநெல்வேலித் தென்னிந்திய சைவசிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, முதல்பதிப்பு, மே 1968, பக். 62.

விடுதலை வீரர்கள் கட்டபொம்மன், மருது பாண்டியர், பாரதி, வ.வே.சு. ஐயர், வ.உ. சிதம்பரனார் ஆகிய தமிழகத்தின் தலைசிறந்த விடுதலை வீரர்கள் ஐவரின் வரலாறு பற்றித் திருச்சி வானொலி ஏற்பாடு செய்திருந்த வானொலிக் கவியரங்கிற்குத் தலைமையேற்றுக் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**அண்ணா கவியரங்கம்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1968, பக். 109-114.

உலகத்தமிழ் மாநாட்டில் 7.1.1968 அன்று நடைபெற்ற அண்ணா கவியரங்கிற்குத் தலைமையேற்று பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**காவியத்திருநாள்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1970, பக். 4-7.

14.1.70 அன்று வானொலியில் `அன்புப் போர்முரசு' என்னும் தலைப்பிலான கவியரங்கிற்குத் தலைமை ஏற்றுக்

கலைஞர் அவர்கள் பாடிய கவிதை.

**வாழ்வெனும்பாதையில்,** முதல்வர் கலைஞர் பிறந்த நாள் மலர், மீ.சு. இளமுருகு பொற்செல்வி, குழித்தலை, ஜூன் 1970, பக். 9.

கல்வி
செல்வம்
கலை
புகழ்
பக்தி

என்னும் தலைப்புகளில் ஐவர் கலந்து கொண்டு கவிதை பாடிய கவியரங்கிற்குத் தலைமையேற்றுக் கலைஞர் பாடிய தலைமைக் கவிதை.

**கவியரங்கில் கலைஞர்,** கலைஞர் நூலகம், சென்னை, முதற்பதிப்பு, 1971, பக்.187.

05.08.67 திருச்சி வானொலி-விடுதலை வீரர்கள்

24.3.68 வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரி-ஐம்புலன்

.......... சேலம் கவிதைப் பட்டிமன்றம்-காதலா? வீரமா?

28.09.68 பரமத்தி வேலூர், கண்டர் கல்லூரி-நீர்க்குடும்பம்

13.04.68 சென்னை வானொலி - பிலவங்க ஆண்டு

13.08.68 கும்பகோணம் - புதிய பாதை

10.08.68 சென்னை - தமிழ் வட்டம்-அறுமறையில் ஐவர்

08.12.68 பம்பாய், பாரதி கலைமன்றம் - பாரதிதாசன்

16.09.68 சென்னை, சிறுவர் அரங்கு - உடைமைகள் பத்து




14.04.70 சென்னை வானொலி - வாழ்வெனும் பாதையிலே

12.01.70 சென்னை வானொலி - பொங்கல் திருநாள்

சென்னை வானொலி - கணக்கு

14.11.70 சென்னை - நேரு கண்ட ஜனநாயகம்

05.05.71 பறம்புமலை பாரிவிழா - பாரிவிழா

12.09.69 சென்னை வாணிமகால் - பாரதியார்

09.02.69 சென்னை வானொலி-இதயத்தைத் தந்திடு அண்ணா

என்றவாறு கவியரங்குகளில் கலந்துகொண்டு கவியரங்கிற்குத் தலைமையேற்றுக் கலைஞர் அவர்கள் வாசித்த கவிதைகளின் தொகுப்பு.

**காதலா-வீரமா?** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1977, பக். 67-80; கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 445-460.

04-08-08 அன்று தமிழர் வாழ்வில் சிறந்தது காதலா-வீரமா? என்ற தலைப்பில் சேலத்தில் நடைபெற்ற கவிதைப் பட்டிமன்றத்திற்குத் தலைமையேற்றுக் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**நீர்க்குடும்பம்,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 81-90; கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 472-482.

பரமத்தி வேலூர் கண்டர் கல்லூரியில் 28.09.68 அன்று நடைபெற்ற கவியரங்கிற்குத் தலைமையேற்றுக் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**உலகத்தமிழ் மாநாடு,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 181-182.

02.01.68 அன்று சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுக் கவியரங்கில் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**புரட்சிக் கவிஞர் 80-ஆவது பிறந்த நாள்,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 190-192.

புரட்சிக் கவிஞரின் 80-ஆவது பிறந்த நாளையொட்டி 29.04.71 அன்று புதுவை அரசு நடத்திய கவியரங்கிற்குத் தலைமையேற்று முதல்வர் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**அண்ணன் இருக்கிறார்,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 193-195.

02.09.72 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற கவியரங்கில் கலந்து கொண்டு கலைஞர் வாசித்த தலைமைக் கவிதையில் சில பகுதிகள்.

**வையம் தழைக்க,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 196-203.

13.04.73 அன்று சென்னை வானொலியில் `வையம் தழைக்க வாழ்த்துவோம்' என்ற தலைப்பில் நடைபெற்ற புத்தாண்டுக் கவியரங்கில் கலந்து கொண்டு கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**தமிழ் வளர வழிநடைப் பயணம்,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 204-209.

12.04.73 அன்று பறம்பு மலையில் நடைபெற்ற பாரிவிழாவில் தமிழ் வளர வழிநடைப் பயணம் என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் கலந்து கொண்டு கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**வெள்ளிவிழா,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 212-219.

அகில இந்திய வானொலியின் சென்னை வானொலி நிலையத்தின் சார்பில் இந்திய விடுதலையின் வெள்ளி விழாவினையொட்டி 15.08.72 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கவியரங்கிற்குத் தலைமையேற்றுக் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**அண்ணன் ஓர் கவியரங்கம்,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 220-226.

04.02.73 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில்

நடைபெற்ற அண்ணா நினைவு நாள் கவியரங்கத்திற்குத் தலைமையேற்றுக் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**தந்தை பெரியார்,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 227-232.

சேலம் நேரு கலையரங்கில், சேலம் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் 01.01.74 அன்று நடைபெற்ற 'தந்தை பெரியார்' கவியரங்கிற்குத் தலைமையேற்றுக் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**அகத்துறைப் படைப்புகள்,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1977, பக். 233-238.

13.07.74 அன்று சென்னை மாநகர மருத்துவக் கல்லூரிகளின் மாணவர்கள் இணைந்து நடத்திய முத்தமிழ் விழாவில் 'அகத்துறைப் படைப்புகள்' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கிற்குத் தலைமையேற்றுக் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**பொங்கல் விழா,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1977, பக். 239-244; கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 514-519;

சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில் 14.01.75 அன்று கலைவாணர் அரங்கில் நடைபெற்ற பொங்கல் விழாக் கவியரங்கில் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**சிலப்பதிகார விருந்து,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1977, பக். 247-257.

பூம்புகார் கொற்றப்பந்தரில் 25.04.75 அன்று சிலப்பதிகார விருந்து என்னும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் கலந்து கொண்டு கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**அண்ணா வழியில்,** கலைஞரின் கவிதைகள், தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, 1977, பக். 258-263.

சென்னை கலைவாணர் அரங்கில் 15.09.75 அன்று மாலை நடைபெற்ற அண்ணா கவியரங்கில் கலந்து கொண்டு கலைஞர்

வாசித்த தலைமைக் கவிதை.

**பாரதிதாசன்,** தமிழினத் தலைவர் கலைஞர் பவள விழா மலர், மும்பை திராவிட முன்னேற்றக் கழகம், மும்பை, 1998, பக். ...

8.12.68 அன்று பம்பாய் பாரதி கலைமன்றத்தில் பாரதிதாசன் என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**கணக்கு-2,** கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 373-381.

15-01-95 அன்று சன் டி.வி தமிழ்மாலையின் பொங்கல்விழாக் கவியரங்கத்தில் கணக்கு என்ற தலைப்பில் கலைஞர் பாடிய தலைமைக்கவிதை.

**புதிய பாதை,** கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 461-471.

13-08-1968 அன்று கும்பகோணம் மூர்த்தி கலை அரங்கில் புதிய பாதை என்ற தலைப்பில் நடைபெற்ற வேளாண்மைக் கவியரங்கில் கலைஞர் அவர்கள் வாசித்த தலைமைக் கவிதை.

**கணக்கு,** கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 499-514.

02-08-70 அன்று சேலம் தமிழ்ச் சங்கத்தில் அரசியல் கணக்கு என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் கலைஞர் பாடிய தலைமைக் கவிதை.

**சமுதாயப் பார்வைகள்..!,** கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 520-530.

ஆனந்த விகடன் பொன்விழாவையொட்டி 7-11-80 அன்று நடைபெற்ற கவியரங்கிற்குத் தலைமையேற்றுக் கலைஞர் வாசித்த தலைமைக் கவிதை.

**காவியம்**

**கலைஞரின் கவிதை நடையில் கார்க்கியின் தாய் காவியம்,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, ஜுன் 2004, பக். 383

தமிழில் `தாய்', `அன்னை' என்னும் பெயர்களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள கார்க்கியின் `தாய்' புதினம் உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பெற்ற பெருமைக்குரியது. இப்புதினத்தைத் தாய் காவியமாகக் கவிதை நடையில் தந்திருக்கிறார் கலைஞர். இக்காவியம் குறித்துக் கலைஞர்;

மாக்சிம் கார்க்கியாம் மனித நேய மாண்பு
மன்பதைக்குத் தந்திட்ட சிவப்புப் பூ! செம்பூ!
'அன்னை'யென்றும் `தாய்' என்றும்
அழைக்கப்படும் அற்புதப் பூ!
பல மொழிகளில் மணம் பரப்பும் அப்பூவை
கலை வண்ணமுடன்
கவிதை நடையில் வழங்குகிறேன்

**Kalaignar's Thai,** Thamizhkani Pathippagam, Chennai, 1st Edition, April 2005, pp.404.

கலைஞர் எழுதிய தாய் காவியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு. பி.கே. பழனிசாமியின் மொழி பெயர்ப்பில்

## உரை

**திருக்குறள்: கலைஞர் உரை,** திருமகள் நிலையம், சென்னை, பத்தாம் பதிப்பு, நவம்பர் 2007, பக். 285 ; பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, டிசம்பர் 2007, பக்.288; கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 1021-1136.

வள்ளுவர் வாழ்ந்த காலத்து நம்பிக்கைகள், பண்பாடுகள், அவை குறித்த வள்ளுவரின் பார்வை ஆகியனவற்றிற்கு மாறுபடாமல் முரசொலி நாளேட்டில் ஒவ்வொரு நாளும் திருக்குறளுக்குக் கலைஞர் எழுதிய உரைகளின் தொகுப்பு.

## உரை விளக்கங்கள்

**குறளோவியம்,** திராவிடன் பதிப்பகம்,வேலூர், முதற்பதிப்பு, மே 1956, பக். 58.

படிப்போர் உள்ளத்தை ஈர்க்கும் நெறியில் வருணனை எழுத்தால் வண்ண ஓவியமாகக் கலைஞர் தீட்டிய தொடக்கக்கால 25 குறளோவியங்களின் தொகுப்பு.

**தலையாலங்கானத்தான்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1958, பக். 18-23.

புறநானூறு 72-ஆம் பாடலுக்குச் சொல்லோவியம் கொண்டு கலைஞர் தீட்டிக்காட்டும் சங்கத் தமிழ் ஓவியம்.

**குறளோவியம்,** முத்துவேல் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, ஜூலை 1961, பக். 81.

குறளோவியம் என்னும் தலைப்பில் திருவள்ளுவரின் 30 குறட்பாக்களுக்குக் கலைஞர் தீட்டியுள்ள சொல்லோவியங்களின் தொகுப்பு.

**கலைஞரின் குறளோவியம்,** கலைஞர் பிறந்த நாள் மலர், குழித்தலை, 1970, பக்.....; கழகக்குரல் -பொங்கல் மலர், சென்னை, 1975, பக். 13.

'பொய்ம்மையும் வாய்மையிடத்த புரை தீர்த்த நன்மை பயக்கும் எனின்' என்னும் குறளுக்கு கலைஞர் தீட்டியே எழுத்தோவியம்.

**சூளுரைத்தவள்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, 1979, பக். 5.

அகநானூறு 262-ஆவது பாடலுக்குச் சொல்லோவியம் கொண்டு கலைஞர் தீட்டிக் காட்டும் சங்கத்தமிழ் ஓவியம்.

**குறளோவியம்,** பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, பிப்ரவரி 1985; இரண்டாம் பதிப்பு, 1986; மூன்றாம் பதிப்பு,

1992; நான்காம் பதிப்பு. 1997. பக். 632.




கலைஞர் முரசொலி, தினமணிகதிர், குங்குமம் ஆகிய இதழ்களில் தொடர்ந்து எழுதி வந்த 301 குறளோவியங்களின் தொகுப்பு. ஒவ்வொரு குறளுக்கும் கலைஞர் அளிக்கும் பின்புலம் கவர்ந்திழுக்கும்; விளக்கும் விறுவிறுப் பூட்டும்; அழகுதமிழ் நம்மை அள்ளிக் கொள்ளும்; அறமும் பொருளும் இன்பமும் அப்படியே புலப்படும்; வள்ளுவம் நம் உள்ளங்கை நெல்லிக் கனியாகும்.

**கலைஞரின் முதல் குறளோவியம்,** முரசொலி-பொங்கல் விழா மலர், முரசொலி, சென்னை, 1992, பக். 295-297.

06.08.1954 முரசொலி நாளிதழில் கலைஞர் எழுதிய முதல் குறளோவியம்.

**சங்கத்தமிழ்,** திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1996; மூன்றாம் பதிப்பு, மார்ச் 2007, பக். 484.

குங்குமம் இதழில் தொடராக வெளிவந்த கலைஞரின் 101 சங்கத்தமிழ் ஓவியங்களின் தொகுப்பு. தான் பெற்ற இலக்கிய இன்பத்தைப் பிறருக்கும் உவந்தளிக்கும் வகையில் கலைஞர் வழங்கிய அறிவுக் கொடை. சங்ககால நிகழ்வுகள். வரலாற்றுச் செய்திகள். தமிழர்தம் நாகரிகக் கூறுகள். பண்பாட்டுச் சிறப்புகள் பளிச்சிடும் வண்ணம் கலைஞர் படைத்தளித்த தேன் தமிழ்க் கிண்ணம். சங்கத் தமிழைத் தம் தங்கத் தமிழால் நம்முன் காட்சிப்படுத்தி மாட்சி கூட்டும் கலைஞரின் அறிவுக் களஞ்சியம் இது.

**Gleanings from Sangam Verses,** Tamil University, Thanjavur, First Edition, March 1997, pp.275.




கலைஞர் சங்கத் தமிழுக்குத் தீட்டிய 79 எழுத்தோவியங்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு. தமிழ்ப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறைத் தலைவர் பேரா.பழனி.அரங்கசாமி மொழி பெயர்த்தது.

**புதியபுறம்,** முரசொலி-பொங்கல் மலர், முரசொலி, சென்னை, சனவரி 1999, பக். 3-7; முரசொலி மணி விழா மலர், முரசொலி, சென்னை, 2002, பக். 68-69.

1964-ஆம் ஆண்டு முரசொலி பொங்கல் மலரில் வெளிவந்த இந்த எழுத்தோவியம், புறநானூறு 286-ஆம் பாடலுக்கான கலைஞரின் கருத்தோவியம்.

**தொல்காப்பியப் பூங்கா,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, சனவரி, 2003 பக். 532.

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்னும் பெருவிருப்பத்துடன் கலைஞர் வழங்கியுள்ள தொல்காப்பிய உரைவிளக்கம். மக்கள் படிக்கத் தக்க எளிய நடை. ஆர்வத்தைத் தூண்டும் கதைக் குறிப்புகள், நினைவில் நிற்கத் துணை செய்யும் வரலாற்றுச் செய்திகள் என நலமும் வளமும் நிறைந்த நற்றமிழில் தொல்காப்பியத்தின் 144 நூற்பாக்களுக்குக் கலைஞர் எழுதியுள்ள உரைப் பூங்கா.

**வான்புகழ் கொண்ட வள்ளுவம்,** திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, ஜுன் 2005, பக். 254.

அறத்துப்பால் மற்றும் பொருட்பாலிலிருந்து அத்தியாயத்திற்கு ஒரு குறள் என 108 குறட்பாக்களுக்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளைக் கவிதை வடிவில் கூறி, பின் குறளைக் கூறி, இறுதியில் உரையோடு முடிப்பது என்ற நிலையில் கலைஞர் எழுதியுள்ள கவிதை வடிவ உரை விளக்கம்.

**தொல்காப்பியப் பூங்கா,** கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக்.1-92.

கால வெள்ளத்தால் கரையாது கலங்கரை விளக்கென நிமிர்ந்து நிற்கும் ஒல்காப் புகழ்த் தொல்காப்பியத்திற்குக் கரும்பு தந்த தீஞ்சாறாய் இனிக்கும் வகையில் கலைஞர் எழுதிய முப்பது

உரை விளக்கங்களின் தொகுப்பு.

**சங்கத்தமிழ்,** கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 93-222.

சொன்னலமும் பொருள் நலமும் உவமை முதலான அணிகளின் பன்னலமும் பொருந்தி மாத்திரை முதலா அடி நிலைகாறும் நோக்குமாறமைந்த சங்க இலக்கியமென்னும் மாணிக்கப் பேழையிலிருந்து ஒளி உமிழும் முப்பது பாடல்களுக்குக் கலைஞர் எழுதிய சொல்லோவியங்களின் தொகுப்பு.

**குறளோவியம்,** கலைஞர் களஞ்சியம், Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 223-302.

பகுத்தறிவு ஒளி துலங்கப் பன்மாண் மெருகு மிளிரப் படிப்பார் நெஞ்சிற் காட்சிப்படமாக விரியுமாறு சொல்லோவியமாகக் கலைஞர் வரைந்த முப்பது குறளோவியங்களின் தொகுப்பு.

**The Flower-garden of Tolkappiyam,** Maruthanayagam .P and V. Murugan (Editors), Macmillan, Coimbatore, First Published 2009. PP. 249.

முனைவர் ஜி. திருவாசகம் மொழிபெயர்ப்பில், தொல்காப்பியப் பூங்காவில் 100 நூற்பாக்களுக்கு கலைஞர் எழுதிய உரை விளக்கங்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு.

**பொது**

**மீசை முளைத்த வயதில்,** தமிழ்க்கனி பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, அக்டோபர் 2006, பக்.

144.

தமிழின வரலாற்றில்-பண்பாட்டில் தோய்ந்து ஆய்ந்த அறிவும், ஒரு படைப்பாளிக்கான குழந்தை மனமும், மொழியைச் சிற்பமாய்ச் செதுக்கும் செயல் திறனும் கொண்ட கலைஞரின் சிறுவயதுப் படைப்புகளின் தொகுப்பு. இத் தொகுப்பு நூலில்;

1. பிறையே
2. ஆடிக் காற்று
3. கருப்புப் பெண்
4. கடலே
5. ஆறு
6. வாழிய வைகறை
7. அகப்பைச் சித்தர்
8. மலையே வாழி
9. தளிர்
10. விண் மீன்
11. தேலைகள்
12. தோழி
13. மருதாயி
14. அருவி
15. முறம்
16. யாழ்
17. சிற்பி
18. சேவல் சண்டை
19. மடல்
20. மயிலிறகு

ஆகிய இருபது சிறுகதைகள்,

தனிமை
ஆண்டுவிழா

ஆகிய இரு சிறு நாடகங்கள்

பச்சைக்கிளி

என்னும் கவிதை இவற்றுடன்

நாடகமேடை

என்னும் கட்டுரை மற்றும்

புகழ்
தமிழே

ஆகிய எழுத்துக்கள் எனக் கலைஞரின் 26 படைப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

**கலைஞர் களஞ்சியம்,** Center for south Asian studies, university of California, Berkeley, First edition, 2008, பக். 1270.

கலைஞரின் வாழ்க்கைக் குறிப்பைத் தொடர்ந்து, கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் தெற்காசிய ஆய்வு மையத்தின் தமிழ்ப் பீடத்தின் George Hart அவர்களின் `தமிழ் இலக்கியத்தில் கலைஞரின் தொண்டு' என்னும் முன்னுரை யுடனான இந்நூலில் கலைஞரின் வாழ்த்துரையுடன்,

தொல்காப்பியப் பூங்கா
சங்கத்தமிழ்
குறளோவியம்
சிலப்பதிகாரம்
கவிதை மழை
சிறுகதை 16
தென்பாண்டிச் சிங்கம்
பொன்னர் சங்கர்
பாயும்புலி பண்டாரக வன்னியன்
நச்சுக்கோப்பை
சிந்தனையும் செயலும்
நெஞ்சுக்கு நீதி
திருக்குறள் உரை
மனோகரா
முத்துக்குளியல்
செம்மொழி



ஆகிய தலைப்புகளில் கலைஞர் எழுதியுள்ள உரை, உரைஓவியங்கள், கவிதைகள், சிறுகதைகள், நாடகங்கள், தன்வரலாறு, திரைப்பட உரையாடல், சிந்தனைத்துளிகள் சொற்பொழிவுகள் ஆகியன இடம்பெற்றுள்ளன.

## வரலாறு-நினைவுப்பதிவுகள்

**ஆறுமாதக் கடுங்காவல்,** திராவிடப் பண்ணை, திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, 1953, பக்.220; பாரதி பதிப்பகம், சென்னை,

இரண்டாம் பதிப்பு, டிசம்பர் 1985; மூன்றாம் பதிப்பு, அக்டோபர் 1990; ஆறாவது பதிப்பு, டிசம்பர் 2006, பக். 160.

ஆறுமாத சிறைத்தண்டனை பெற்றுப் பாளையங்கோட்டை சிறைச்சாலையில் தனிக் கொட்டடியில் அடைக்கப்பட்டிருந்த காலத்திய கலைஞரின் சிறை அனுபவங்களின் நினைவுப் பதிவு.

**ஒன்பதாவது....** முரசொலி-அண்ணாமலர், முரசொலி, சென்னை, 1968, பக். 3.

நியூயார்க் நகரத்து மெமோரியல் மருத்துவ மனையின் ஒன்பதாவது மாடியில் மருத்துவம் பார்த்துக்கொண்டிருந்த அண்ணாவைக் கலைஞர் சந்தித்த வரலாற்றுப் பதிவு.

**தொல் புகழ் போதாது,** தலைவர் கலைஞர் பவளவிழா மலர்,திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, ஜூன் 1999, பக்.........

பாரிசு மாநகரில் 1971 சூலை 15-ஆம் நாள் நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் ஆற்றிய உரை குறித்தும், அம்மாநாட்டு நிகழ்வு குறித்துமான கலைஞரின் நினைவுப் பதிவு.

**மலரும் நினைவுகள்,** திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, பிப்ரவரி 1996; இரண்டாம் பதிப்பு, பிப்ரவரி 2000; மூன்றாம் பதிப்பு, செப்டம்பர் 2002; ஐந்தாம் பதிப்பு, ஆகஸ்ட் 2008, பக். 125.




தமிழகத்தில் சட்டப்பேரவை உறுப்பினர். எதிர்க்கட்சித் தலைவர், பொதுப்பணித்துறை அமைச்சர், முதலமைச்சர் எனும் நிலையில் 50 நிகழ்வுகளின் நினைவுப் பதிவு. `இதயம் பேசுகிறது' வார இதழில் மலரும் நினைவுகளாக வெளி வந்தது.

**பொங்கிய தமிழகம்,** முரசொலி-மணிவிழா மலர், முரசொலி, சென்னை, 2002, பக். 104-105.

1958 சனவரி 3-இல் சென்னையில் அந்நாள் பிரதமர் நேரு

அவர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டப்பட்டதைத் தொடர்ந்த நிகழ்வுகளின் வரலாற்றுப் பதிவு.

**அன்னை அஞ்சுகம் முத்துவேலர் பற்றி...,** தலைவர் கலைஞர் 79-ஆவது பிறந்த நாள் சிறப்பு மலர், முரசொலி, சென்னை, 2002, பக். 4.

தம் அன்னை அஞ்சுகம் அவர்களுடனான நினைவுப் பதிவுகள்.

**மும்முனைப் போராட்டம், கல்லக்குடி களம்,** திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு 2002; மூன்றாம் பதிப்பு, ஜூன் 2006, பக். 76.

கலைஞரின் அரசியல் போராட்ட வரலாற்றில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது 1953-இல் கலைஞர் தலைமையில் நடைபெற்ற கல்லக்குடி மும்முனைப் போராட்டம், இதற்கான சூழ்நிலைகள் உருவானது முதல் கைது செய்யப்பட்டுச் சிறைவாசம் முடிந்த காலம் வரையிலான கலைஞரின் நினைவுப் பதிவு.

**மறக்கமுடியுமா?,** தலைமைக்கழக வெளியீடு, திராவிட முன்னேற்றக் கழகம், சென்னை, முதற்பதிப்பு, சனவரி 2004, பக். 40.

அரசியல் வித்தகராம் திரு. முரசொலி மாறன் அவர்களைப் பற்றிக் கலைஞர் அவர்கள் குமுதம் வார இதழில் எழுதிய நினைவுப் பதிவுகளின் தொகுப்பு.

**கலைஞரின் பசுமை நினைவுகள்,** பாரதி பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு, ஆகஸ்ட் 2004; இரண்டாம் பதிப்பு, டிசம்பர் 2006, பக். 136.

கலைஞர் என்னும் ஒரு மாபெரும் மக்கள் தலைவரின் நீண்ட நெடிய அரசியல் பயணத்தில் ஏற்பட்ட கொப்புளங்கள்...இரணங்களின் 49 நினைவுப் பதிவு

**நெருக்கடி நெருப்பாறு,** திருமகள் நிலையம், சென்னை, மூன்றாம் பதிப்பு, நவம்பர் 2006, பக்.......

நெருக்கடி நிலையை எதிர்த்தால் தாம் வகித்து வரும் முதலமைச்சர் பதவிக்கு ஆபத்து என்று அறிந்தும், பதவியைப் பற்றிச் சிறிதும் கவலைப் படாமல் நெருக்கடி நிலையை எதிர்த்த கலைஞரின் நெருக்கடிநிலைக்கால அனுபவங்கள் குறித்த பதினாறு கட்டுரைகள் கொண்ட வரலாற்றுப் பதிவு.

## தன் வரலாறு/வாழ்க்கை வரலாறு

**நெஞ்சுக்கு நீதி- முதற்பாகம்,** தினமணி கதிர் வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 1975; திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு,

1986, இரண்டாம் பதிப்பு,1989; மூன்றாம் பதிப்பு, 1994; நான்காம் பதிப்பு, 1997; ஐந்தாம் பதிப்பு, செப்டம்பர் 1977; ஆறாம் பதிப்பு, செப்டம்பர் 1998; ஏழாம் பதிப்பு, மார்ச் 2000; எட்டாம் பதிப்பு, ஏப்ரல் 2002; ஒன்பதாம் பதிப்பு, ஜூன் 2006; பத்தாம் பதிப்பு, செப்டம்பர் 2009, பக். 755.

தாம் பிறந்த 1924-ஆம் ஆண்டு தொடங்கி- 1969-ஆம் ஆண்டு வரையிலான கலைஞரின் வாழ்க்கை வரலாற்றையும், தமது வாழ்க்கையோடு இரண்டறக் கலந்த திராவிட முன்னற்றக் கழகத்தின் வரலாற்றையும், இவற்றின் ஊடாக உலக வரலாற்றுக் குறிப்புக்களையும் கொண்டதாகக் கலைஞரால் படைக்கப்பட்டுள்ள வரலாற்றுக் காப்பியம்.

**நெஞ்சுக்கு நீதி - இரண்டாம் பாகம்,** திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1987; இரண்டாம் பதிப்பு, 1994; ஏழாம் பதிப்பு, டிசம்பர் 2007; எட்டாம் பதிப்பு, செப்டம்பா 2009, பக். 586.

சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திடும் சிற்பிகளின் வரலாறு தனிமனித வாழக்கை வரலாறாக அமைவதில்லை. சமுதாயத்தின் சமகால வரலாறாக அமையும். அந்த வகையில் 1969 முதல் 1977 தொடக்கம் வரையுள்ள தமிழக வரலாறாகவும் 45 வயது முதல்

53 வயது வரையிலான கலைஞரின் வாழ்க்கை வரலாறாகவும் இந்நூல் அமைந்துள்ளது.

**என் கதை,** குங்குமம்- வாரஇதழ் (இலவச இணைப்பு), சென்னை, 10-16. பிப்ரவரி 1989, பக். 16.

திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் ஒரு மாபெரும் அரசியல் இயக்கத்தின் வரலாற்றின் ஊடாக, அதன் வரலாற்றோடு இரண்டறக் கலந்திட்ட கலைஞரின் வாழ்க்கை வரலாறு கூறும் நூல்.

**நெஞ்சுக்கு நீதி - மூன்றாம் பாகம்,** திருமகள் நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1996; மூன்றாம் பதிப்பு, பிப்ரவரி 1999, பக். 612.

வாழ்க்கையே ஒரு போராட்டம் என்று வர்ணிப்பார் உளர். எனக்கோ போராட்டமே வாழ்க்கையாகிவிட்டது என்பார் கலைஞர். அந்த வகையில் 1976 தொடங்கி 1991 வரையிலான 15 ஆண்டு கால கலைஞரின் வாழ்வோடு இணைந்த அரசியல் வரலாறுகளின் தொகுப்பு.

**நெஞ்சுக்கு நீதி-நான்காம் பாகம்,** திருமகள் நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, ஜூலை 2007, பக்.630.

1989 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தின் உலகளாவிய வரலாற்று நிகழ்வுகள், இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள், அவற்றைத் தீர்க்க கலைஞர் மேற்கொண்ட முயற்சிகள்/நடவடிக்கைகள், ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலங்களில் தமிழகத்திற்குக் கழகஆட்சி செய்த சாதனைகள் ஆகியனவற்றின் ஊடான கலைஞரின் வாழ்க்கை வரலாறு.

## கடிதங்கள்

**புகுமுன்,** முரசொலி-அண்ணா 54வது பிறந்த நாள் சிறப்பிதழ், முரசொலி, சென்னை, 1962, பக். 1-3.

அன்புத்தம்பி மாறனுக்கு திருச்சி மத்தியச் சிறைச்சாலையிலிருந்து 04.9.1962 அன்று கலைஞர் எழுதிய

கடிதம். கலைஞர் எழுதிய கடிதம் சிறையிலிருந்து வெளியே அனுப்ப அனுமதிக்கப்படாத நிலையில் சிறையிலிருந்து வெளியே வந்த நாடக மேடை அனுபவம் பெற்ற தோழர் காமாட்சியின் மனப்பாடத் திறமையினால் இக்கடிதம் அச்சு வடிவம் பெற்றது.

**விழாக்கோலம்,** திராவிடன்-பொங்கல் மலர், என்.வி.நடராசன், சென்னை, 1965, பக். 12.

கலைஞர் எழுதிய பொங்கல் வாழ்த்துக் கடிதம்.

**உன்னையே நீ எண்ணிப் பார்!** முரசொலி-அண்ணா மலர், முரசொலி, சென்னை, 1972, பக். 3; காஞ்சி-அண்ணா நினைவு மலர், அ.பாபு, சென்னை, 1973, பக். 11-13.

ஒவ்வொரு கழகத்தொண்டர்களும் தங்களை, தங்களின் செயல்பாடுகளை எண்ணிப்பார்ப்பது தங்களுக்கும் இயக்கத்திற்கும் நலம் சேர்க்கும் என்பதை வலியுறுத்தி கழகத் தொண்டர்களுக்குக் கலைஞர் அவர்கள் எழுதிய கடிதம்.

**நமது குரல்,** கழகக்குரல்-கலைஞர் பொன்விழா மலர், சி.சிட்டிபாபு, சென்னை, 1974, பக். அ.

கழகக்குரல்-நமது குரல் என்பதாகக் கழகக்குரல் வார ஏட்டிற்கு வாழ்த்துச் சொல்லி கலைஞர் அவர்கள் எழுதிய கடிதம்

**உயர்த்திடுவோம் தோள்,** கழகக்குரல்-முப்பெரும்விழா மலர், சி.சிட்டிபாபு, சென்னை, 1974, பக். 1,16.

இந்தி எதிர்ப்புப்போரில் புகைவண்டி நிலையங்கள், அஞ்சலகங்களில் இந்தி எழுத்துக்களைப் பெரியாரும் தி.மு.க.வினரும் தனித்தனியே அழித்த நிகழ்வுகள் குறித்த கலைஞரின் கடிதம்.

**தீந்தமிழ்க் காவலனுக்குத் தியாகதீபத்தின் வாழ்த்து,** அண்ணா மலர்,சிந்தனையாளர் மன்றம், பூம்புகார், 1974. பக்.....

அண்ணா மலர் 62க்கு கட்டுரை எழுத முடியாமைக்கான காரணத்தை விளக்கி திருச்சி

மத்திய சிறையிலிருந்து 4.9.62 அன்று முரசொலி மாறனுக்குக் கலைஞர் எழுதிய கடிதம்.

**அண்ணன் எண்ணம் உணர்க,** முரசொலி-பொங்கல் சிறப்பிதழ், முரசொலி, சென்னை, 1975, பக். 1, 4.

தமிழன், தமிழ்நாடு என்ற எண்ணம் மறந்து நிற்கும் நிலை மாறிட பாடுபட வேண்டும் என்ற அண்ணாவின் எண்ணம் உணர்ந்து செயல்பட கழகத் தோழர்களை அழைக்கும் கலைஞரின் கடிதம்.

**கண்ணின்மணி உறங்கும் கல்லறை நோக்கி,** கழகக்குரல்-அண்ணா நினைவு நாள் இதழ், சென்னை, 02.02.1975, பக்.1,20.

பேரறிஞர் அண்ணா நினைவு நாளில் அண்ணாவின் நினைவுகள் குறித்துக் கலைஞர் எழுதிய கடிதம்.

**இதயச்சுமையும் இனிய வாழ்த்தும்,** கழகக்குரல்- பொங்கல் மலர், சி.சிட்டிபாபு, சென்னை, 1975, பக்.2-4.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முனைப்பான தோழர்களுக்குக் கலைஞர் எழுதிய பொங்கல் வாழ்த்துக் கடிதம்.

**வாழ்த்திடுக நீ வளர்த்த கழகத்தை!,** முரசொலி-அண்ணா மலர், முரசொலி, சென்னை, 1977, பக். 1-2.

அண்ணா மறைந்து ஒன்பது ஆண்டுகள் கழித்து கலைஞர் எழுதும் ஒன்பது ஆண்டுகால வரலாற்றுச் சுருக்கம். கடித வடிவில்.

**காத்திட்ட கரமும் களைப்பாற்றிய கரமும்,** முரசொலி-அண்ணா பெரியார் சிறப்பிதழ், முரசொலி, சென்னை, 1978, பக்.2-3.

காத்திட்ட கரம் தந்தை பெரியாரின் கரம், களைப்பாற்றிய கரம் பேரறிஞர் அண்ணாவின் கரம் என்பதைச் சொல்லும் கலைஞரின் கடிதம்.

**இணைந்து பொங்கட்டும் இந்த நாளில்,** நம்நாடு-பொங்கல் மலர், மு.கருணாநிதி, சென்னை, 1979, பக். அ-ஆ.

என் தமிழ்மொழியும் மத்திய ஆட்சிமொழிகளில் ஒன்றாக

ஆகும் வரையில் நான் திருப்தி கொள்ள மாட்டேன் என்னும் அண்ணாவின் குறிக்கோளை நினைவுபடுத்தி கழகத்தோழர்களுக்குக் கலைஞர் எழுதிய பொங்கல் வாழ்த்துக் கடிதம்.

**இலங்கைத் தமிழா! இது கேளாய்!!,** *பாரதி நிலையம், சென்னை, முதற்பதிப்பு, 1981, பக். 128.*

முரசொலி நாளிதழில் எழுதிய 10 கடிதங்கள் மற்றும் ஈழத்தமிழர் பிரச்சினைக்காக கலைஞர் ஆற்றிய உரைகள் இணைந்த நூல்.

**மழையில் நனையும் மண்ணாங்கட்டி, நீதிகேட்டு நெடிய பயணம்,** *பாரதி நிலையம், சென்னை, 1982, பக். 118-121.*

மயிலை மாங்கொல்லையில் அன்றைய அறநிலையத் துறை அமைச்சர் இராம. வீரப்பன் அவர்கள் பேசிய பேச்சுக்குப் பதில் சொல்லி கலைஞர் அவர்கள் எழுதிய கடிதம்.

**நடந்தாய் வாழி கண்மணியே,** *நீதி கேட்டு நெடிய பயணம். பாரதி நிலையம், சென்னை, ஏப்ரல் 1982, பக். 115-117.*

